ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும்
ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை
ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3. தனிப் பிரதி 4 அணா

மலர் 13 } செப்டம்பர் 1952 { இதழ் 9

கடவுளும்-காங்கிரஸும்

சமீபத்தில் நடந்த நகர சபைத் தேர்தல்களில், கனம் ராஜாஜி பிரதம மந்திரி உட்பட எல்லா மந்திரிகளும், காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டு ஆதரிக்குமாறு எல்லா முனிசிபல் தேர்தல்களிலும் பிரசாரம் செய்து வந்தனர். பற்பல இடங்களில், காங்கிரஸ் தேல்வியுற்றது, சிற்சில இடங்களில் வெற்றியும் பெற்றது. ஆனால், சென்னையைப் பொறுத்தமட்டில் காங்கிரசுக்கே, வாக்களித்தவர்கள் 100 க்கு 40 பேர், காங்கிரஸை எதிர்த்து ஓட்டுப் போட்டவர்கள் 100 க்கு 60 பேர் வெற்றி தோல்வி எல்லாக் கட்சிகளிலும் சகஜம். அதைப் பற்றி, நாம் இங்கு அதிகம் ஆராயத் தேவையில்லை. ஆனால், "காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டு கடவுள் பக்தியைக் காட்ட வேண்டும் என்று கனம் ராஜாஜி சொல்வதும், காங்கிரஸுக்கு போடும் ஒவ்வொரு ஓட்டும் நாட்டில் நாஸ்திகம் பரவுவதை தடுப்பதற்கு, நல்ல வழி என்றும்" மந்திரி மார்கள் தேர்தல் கூட்டத்தில், பிரசாரம் செய்

ததைக் காண மிக மிக ஆச்சரியப்படுகின்றோம். ஒரு நாட்டில், ஒரு கட்சி மக்களிடத்தில் செல்வாக்குப் பெறவேண்டுமானால், தாங்கள் மக்களுக்கு என்ன நன்மைகள் செய்யப் போகின்றார்கள், என்பதை அல்லது தாங்கள் தயாரித்த திட்டங்களை, கொள்கைகளை, மக்களுக்கு எடுத்து விளக்கிக் காட்டி, மக்கள் செல்வாக்கை பெறவேண்டுமே யொழிய, கடவுளைப் பற்றி பிரசாரம் செய்வது அல்ல. எந்த நாட்டிலும் காணமுடியாத மட்டரகமான இத்தகைய கட்சி பிரசாரத்தை நாம் இன்று நமது மாகாணத்தில் காண்கின்றோம்.

அதற்குக் காரணம், நம் நாட்டில் படியாதவர்கள் 100 க்கு 85 பேர் இருப்பதே ஆகும். அப்படி மக்கள் படியாமல் இருந்தும் காங்கிரஸ் பித்தலாட்டப் பிரசாரத்தால் மக்கள் ஏமாந்து விடவில்லை, பகுத்தறிவு பிரசாரம் ஏராளமாக நம் நாட்டில் வளர்ந்து வரும் காரணத்தால்.

காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சியா, அல்லது புராண பிரசங்க மடாலயக் கூட்டமா என்று நமக்கு விளங்க வில்லை. காங்கிரஸையும், கடவுளையும், ராஜாஜி ஒப்பிட்டு பேசியதை ஓர் உண்மையான கடவுள் பக்தன் சிந்திப்பானானால், அவன் மனம் மிக மிக புண்பட்டே இருக்கும். கடவுளின் புனிதத் தன்மை, நாட்டில் இவ்வளவு மட்டரகத்திற்கு வந்து விட்டதே என்று, ஆண்டவனிடம் முறையிடுவதைத் தவிர, வேறென்ன இருக்கிறது. காங்கிரஸ் ஓர் அரசியல் கட்சி, ஆளும் கட்சி. அது செய்ய வேண்டியது மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், அறிவின்மையைப் போக்க, கல்வியைக் கொடுப்பதைத் தவிர, ஆண்டவன் பிரசாரம் அல்ல.

சென்ற தேர்தலில், காந்தியாரையும், நேருவையும் காட்டி ஓட்டுக் கேட்டார்கள். சென்னை மகாண பாமரமக்கள் காங்கிரஸ் என்பது ஏழை மக்களின் ஸ்தபானம் அல்ல என்பதை எடுத்துக் காட்டி, காங்கிரஸை மண்ணைக் கவ்வும்படி செய்து இருக்கின்றனர். கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்ற வாதம் உலகம் என்று தோன்றிற்றோ அன்றிலிருந்து இருந்து வருகிறது. அந்த வாதம், சண்டை, ஆராய்ச்சி உலகம் இருக்கும் வரை இருந்தே தீரும். அந்தப் பிரச்சனை உலகத்தில் எந்தக் கட்சியாலும், தீர்க்க முடியாத பிரச்சனையாகும். "அன்பே கடவுள்" என்கிறார் திருமூலர், "அறிவே தெய்வம்" என்கிறார் தாயுமானவர், "ஜோதியே கடவுள்" என்கிறார் இராமலிங்க அடிகள். ஆதலின், கடவுளின் தன்மை ஒவ்வொரு பக்தனுக்கும், ஒவ்வொரு விதமாகக் காணப்படுகிறது, அறியப்படுகிறது. ஆனால், நம் தென்னாடு பொருத்தமட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையைக் கடைப்பிடித்து, ஆண்டவன் ஒன்று உண்டு என்ற

அடிப்படைக் கொள்கையில் தான் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். கடவுளை வழிபடும் துறையில், மக்களை அனாவசியமாக ஒரு குறிப்பிட்ட சார்பாரால், கடவுள் பெயரால் சுரண்டப்படப்பட்டு, ஏமாற்றக்கூடாது என்று, இன்றைக்கு சுமார் 500 ஆண்டுகளாக இராமலிங்க அடிகள் போன்ற பல பக்தர்களும், சித்தர்களும் கடவுள் வழிபாட்டில் சீர்திருத்தங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். சீர்திருத்தம் கூறுபவர்களை நாஸ்திகர்கள் என்று சொல்லிவிட முடியாது. தென்னாடு பொறுத்த மட்டில் நாஸ்திகம் என்பது மக்களுக்குத் தெரியாது என்றே சொல்லலாம். அப்படிப்பட்ட மக்களை இன்று காங்கிரஸ் ஆட்சியில் உள்ளவர்களே, அனாவசியமாக பாமரமக்களை ஏமாற்றி, காங்கிரஸை எதிர்க்கும் மக்களை, கட்சிக்காரர்கள் அத்தனை பேர்களையும், நாஸ்திகர்கள் என்ற அனாவசியமான பட்டத்தைச் சூட்டி தங்கள் அரசியல் செல்வாக்கை வளர்த்துக்கொள்ள செய்யும் சூழ்ச்சியே ஆகும். உண்மையிலேயே ராஜாஜி நாட்டில் நாஸ்திகம் பரவுகிறது. என்று கருதுவாரேயானால், அவர் இருக்க வேண்டிய இடம் பிரதம மந்திரிஸ்தானம் அல்ல. சங்கராச்சாரியாரைப் போல் ஒரு மடத்தை ஸ்தாபித்து, ஆஸ்திக பிரசார மடம் என்று அதற்குப் பெயரிட்டு அதன் தலைவராக இவர் இருந்து கொண்டு, தற்போது தென்னாடு பஜமேகாவிந்தம் போடும் மந்திரி மார்களை, தனது சீடர்களாக ஆக்கிக்கொண்டு, கிராமந்தோறும் கடவுள் பிரசாரம், பஜகோவிந்தம், புராண பிரசங்கம் செய்வாரானால், உண்மையிலேயே இவர் நல்ல கடவுள் பக்தர் என்று கருத முடியும்.

ஆனால், இந்த ஆட்சி பீடத்தில் உட்கார்ந்துகொண்டு, ஆண்டவன் பிரசாரம் செய்வாரானால், அந்த பிரசாரம் பொதுமக்களை ஏமாற்றும் தந்திரம் என்பதை, அரசியல்சூழ்ச்சி என்பதை, தென்னாட்டு மக்கள் பாமரராய் இருந்தாலும், படியாதவராய் இருந்தாலும், பகுத்தறிவு பிரசாரம் வளர்ந்து வரும் காரணத்தால் இனி ஏமாற்ற முடியாது என்பதை எடுத்துக் காட்டுகிறோம். அரசியல் வேறு, ஆண்டவன் வழிபாடு வேறு. அரசியல் ஒரு சூதாட்டம். அதில் அயோக்கியர்களுக்கே அதிக செல்வாக்குக் கிடைக்கும் என்று மேனாட்டுப் பெரிய அரசியல் தத்துவ ஞானிகள், எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். இதை ராஜாஜி உணர்வாரா.

கல்வியில் சீர்திருத்தம்

நமது நாட்டுக் லல்வி முறையை, குறிப்பாக, செகண்டரி கல்வி முறையை, சீர்திருத்தம் செய்வதற்காக டாக்டர் A. லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் தலைமையில் டில்லியில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு இருக்கிறது. அக்கமிட்டியில் பெரும்பாலும் சர்வகலாசாலை சம்பந்தப்பட்டவர்களே அமர்த்தப் பட்டிருக்கின்றனர். அந்தக்

கமிட்டி, இந்தியா பூராவும் பல மாகாணங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து, தற்போதுள்ள கல்வி முறையை எந்த முறையில் சீர்திருத்த வேண்டும் என்பதை விளக்கி ஓர் அறிக்கை வெளியிடுமாம். அதற்காக பொது மக்கள் பணம் ஆயிரக்கணக்கில் செலவாகப் போகிறது. இது உண்மையிலேயே கல்விச்சீர் அமைப்புத் திட்டம் அல்ல, இது மக்களின் கண்துடைப்புத் திட்டமாகும். அரசாங்கத்தார் நாட்டில் போதிய ஆசிரியர்கள் அகப்படவில்லை என்கிறார்கள், அகப்படும் ஆசிரியர்களுக்கும் பணம் கொடுக்க முடியவில்லை என்கிறார்கள். இந்த நிலையில் இந்தக் கமிட்டி வெளியிடும் திட்டத்தை எவ்விதம் அரசாங்கம் நடைமுறையில் கொண்டு வரமுடியும் என்பது நமக்கு விளங்கவில்லை.

மேலும் இந்தக் கமிட்டியில் சேர்க்கப்பட்டு இருப்பவர்கள் பெரும்பாலும் சர்வகலாசாலைகளில், கல்லூரிகளில், அதிகம் தொடர்புடையவர்கள். ஆரம்பக் கல்வியிலேயோ, செகண்டரி கல்வியிலேயே அவ்வளவு அனுபவம் இல்லாதவர்கள். ஆனால் இவர்கள் செல்லும் மாகாணங்களின் கல்விச் சம்பந்தப்பட்ட ஆரம்ப ஆசிரியர்களையும், மற்றவர்களையும் கூட்டி விவாதிப்பார்களானால் நல்லதோர் திட்டத்தை தயாரிக்கமுடியும்.

நமது மாகாணம் பொருத்தமட்டில் கல்வி நிலையங்களை மூன்று விதமாக பிரிக்கப்படவேண்டும். (1) ஆரம்பக்கல்வி (2) உயர்தரக் கல்வி (3) கல்லூரிக்கல்வி, என்பனவாகும். அரசியல் சட்டப்படி பதினான்கு வயது வரையில் கட்டாயம் இலவசமாக ஓர் மாணவன் படித்தாகவேண்டும். அதன்படி 1 முதல் 8—வது வகுப்பு வரையில் இலவசமாக ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கப்படவேண்டும். தற்போதுள்ள 1, 2, 3—வது பாரங்களுள்ள செகண்டரி பாடசாலைகளை உயர்தர ஆரம்பப் பாடசாலைகளாக மாற்றி விடவேண்டும். இப்பாடசாலைகளில் செகண்டரி கிரேடு உபாத்தியாயர்கள் அகப்படாத காரணத்தால் ஓர்செகண்டரிகிரேடுஆசிரியர் தலைவராக இருந்தால் போதுமானது. உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில், தற்போதுள்ள அரசாங்க பரீட்சை வைத்து தேறினவர்களை நான்காவது படிவத்திலிருந்து உயர்தர பாடசாலைகளில் சேர்க்கப்படவேண்டும். அப்படிச் செய்தால் ஏழை மக்கள் குறைந்த செலவில் எட்டாவது வகுப்பு வரையில் படிக்க வசதியாகும்.

பண வசதியுள்ளவர்கள் உயர்தர பாடசாலைகளில் (High Schools) படிக்கலாம். செகண்டரி ஸ்கூல் என்பதை 1, 2, 3. பாரங்கள் உள்ள பாடசாலைகளை, 4—வது பாரம் முதல் 6—வது பாரம் வரையில் உள்ள உயர்தர பாடசாலைகளாக மாற்றப்படவேண்டும். தக்க பொருளாதாரம் இல்லாத ஏழை மக்களும், நடுத்தர மக்க

ளுமே நம் நாட்டில் ஏராளம். அவர்களைப் படிக்கச்செய்வது ஒரு அரசாங்கத்தின் முக்கிய கடமை. அக்கருத்தைக் கொண்டுதான் அரசியல் திட்டத்தில் பதினுன்கு வயது வரையில் ஒரு மாணவனுக்கு இலவசமாக படிப்பு கற்பிக்கவேண்டும் என்று அரசியல் சட்டத்தில் எழுதபட்டுள்ளது.

இந்தச் சீர்திருத்தத்தைச் செய்ய டெல்லியிலிருந்து ஒரு கமிஷனோ கமிட்டியோ நமக்குத் தேவையில்லை. ஆரம்ப ஆசிரியர்களை கேட்டிருந்தால் நல்லதோர் திட்டத்தை, அனுபவத்தில் நடத்திக் காட்டக்கூடிய ஒரு திட்டத்தை கொடுத்திருப்பார்கள்.

டாக்டர் A. லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் சமீபத்தில் சென்னையில் நடந்த ஆசிரியர் கூட்டத்தில் "கல்வியில் எத்தகைய சீர்திருத்தம் செய்ய வேண்டுமானுலும் ஆசிரியர்களாலேயே செய்யப் படும் சீர்திருத்தம் தான். நடை முறையில் நடைபெறும்" என்று எடுத்துக்காட்டி இருக்கின்றார். அதோடல்லாமல் ஆசிரியர்களுக்கு வாழ்க்கை வசதிக்கு வேண்டிய சம்பளம் கொடுக்கப்பட்டால்தான் எந்தத் திட்டமும் நடை முறையில் திருப்திகரமாக ஆசிரியர்களால் நடத்தமுடியும் என்றும் விளக்கிக் கூறி இருக்கிறார்.

இந்த இரண்டு முக்கிய அடிப்படைக் கொள்கைகளை நிறைவேற்றப்படாமல் கமிட்டிகள் ஏற்படுத்தி ரிபோர்ட் எழுதி தயாரித்து பத்திரிகைகளில் வெளியிடுவதில் என்ன பிரயோஜனம்.

இதை சென்னை அரசாங்கம் கவனிக்குமா !

முதியோர் கல்வி

வாஷிங்டன், அக். 2—முதியோருக்கு என்று தனிப்பட்ட சில வகுப்புக்கள் அமெரிக்கா நெடுகிலும் நடத்தப் படுகின்றன.

இவ்வாறு பொதுப் பாடசாலைகளில் மாலையில் நடத்தப்பட்ட விரிவுரைகளுக்கு 1951ல் 47,45,000 பேர் வந்தனர் என்றும் இவர்களில் கால்வாசிப் பேர் வீட்டுப் பெண்டிர் என்றும் நாட்டுக் கல்விக் கழகம் கூறுகிறது.

71 பேர் செல்லக்கூடிய பிரயாணிகள் விமானம்

வாஷிங்டன், அக். 2–71 பேர் செல்லக்கூடிய விமானம் ஒன்று சிறிதுகாலமாக நியூயார்க்குக்கும் மேல் கடற்கரை யிடங்களுக்கும் பிரயாணிகளை ஏற்றிப் பறக்கிறது. அது டிரான்ஸ் வொர்ல்டு ஏர்லைன்சைக் சேர்ந்தது. இதை விடப் பெரிய விமானம் உலகில் இல்லை.

அடுத்த அமெரிக்க ஜனாதிபதி யார்?

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் நான்கு வாரங்களே இருக்கின்றன. இன்றைய நிலைமை என்ன?

(1) குடியரசுக் கட்சி ஐசனோவர் வெல்வாரா? ஜனநாயகக் கட்சி ஸ்டீவன்சன் வெல்வாரா? இன்னும் சொல்வதற்கில்லை.

(2) இவ்வாண்டு வாக்காளர்களாகப் பதிவு செய்திருப்போர் ஏராளம், புதிதாக வாக்குரிமை பெற்றிருப்போர் தொகையும் அதிகம். தேர்தல் முடிவு யாதாகும் என்று ஒன்றும் சொல்வதற்கில்லை. எப் பக்கமும் சேராமல் இருக்கும் வாக்காளர்களைத் தம் பக்கம் சேர்த்துக்கொள்ள இருவருமே முயன்று வருகின்றனர்.

(3) பொது மக்கள் கருத்து எப்பக்கம் சாய்கின்றது என்பதைக் கண்டு ஒருவாறு மதிப்பிட இன்னும் ஒரு மாதமும் ஆகலாம்.

ஐசனோவர் ஸ்டீவன்சன் இருவருமே இன்றும் தங்கள் தங்கள் தேர்தல் பிரசாரத்தை நாடு முழுதும் நடத்த முனைந்துள்ளனர்.

ஜனாதிபதி ட்ரூமன், ஸ்டீவன்சன் சார்பாகப் பிரசாரம் செய்யப் புறப்பட்டிருக்கிறார். அவர் வேளாண்மை பெருத்த மத்திய அமெரிக்க ராஜ்யங்கள் வழியாகப் பிரசாரம் செய்து கொண்டு மேற்குக் கடற்கரைப் பகுதி போய்ச் சேருவார். மத்திய ராஜ்யங்களிலுள்ள விவசாயிகள் அளித்த ஆதரவே 1948ல் ட்ரூமன் ஜனாதிபதியாகும்படி செய்தது.

ஐசனோவர் மீண்டும் தென் ராஜ்யங்களில் நுழைந்திருக்கிறார். தென் கரோலினா ராஜ்யத்தில் ஆதரவு பெற முயல்கிறார். அந்த ராஜ்யத்துக் கவர்னர் ஜேம்ஸ் எப். பயர்ன்ஸ். இவர் முன்பு ஜனாதிபதி ட்ரூமன் ஆட்சியில் வெளிநாட்டு மந்திரியாக இருந்தவர். அதற்கு முன்பு சுப்ரீம் கோர்ட் நீதிபதியாயிருந்தவர். இவர் இன்று ஐசனோவரை ஆதரிக்கிறார்.

தென் கரோலினாவுக்கு அப்புறம் ஐசனோவர் மத்திய மேற்கு ராஜ்யங்களைப் பார்ப்பார். அங்கிருந்து மேற்குக் கடற்கரை மக்களைப் போய்ப் பார்ப்பார். அதன் பின் தெற்கு ராஜ்யங்கள் வழியாகக் கீழ்கடற்கரை வந்து சேர்வார். இவையாவும் இரண்டு வாரத்தில் முடிந்து விடும்.

இதேபோல் ஸ்டீவன்சனும் ரயில், விமானம் வழியாக ஐசனோவர் சென்ற ராஜ்யங்களுக்கெல்லாம் சென்று முடிப்பார்.

இவ்வாறு இவர்கள் நாட்டில் பாதிக்குமேல் பிரயாணம் செய்து பிரசாரம் செய்து விடுவார்கள்.

இதற்குமுன் ஜனாதிபதித் தேர்தலுக்கு நின்றவர்கள் இவ்வளவு ஊக்கமாகவும் இடைவிடாமலும் இவ்வளவு இடங்களிலும் பிரசாரம் செய்ததில்லை.

பிரயாணம் செய்து வந்த களைப்பை இரண்டு மூன்று நாட்களில் ஆற்றிவிட்டு, இருவரும் நியூயார்க், பாஸ்டன் முதலிய மாபெரும் பட்டணங்களில் முக்கிய பேச்சு நிகழ்த்துவர்.

நிர்வாகத்தில் புகுந்துள்ள ஊழல்களை ஒழித்து முடிப்பதாக ஐசனோவர் சொல்லுகிறார்; அவ்வேலையைத் தமது எதிராளி செய்ய இயலாது என்பது இவர் கூற்று.

ஸ்டீவன்சனும் ஜனாதிபதி ட்ரூமனும், ஐசனோவர் வந்தால் நிர்வாகம் இன்னும் மோசமாகும் என்கின்றனர். உள்நாட்டுக் காரியங்களைக் கவனிக்க ஐசனோவருக்குத் திறமை இல்லை என்றும், அவர் பதவிக்கு வருவாரானால் குடியரசுக் கட்சியின் பழைய தலைவர்களே ஆட்சி நடத்துவோராவர் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

வெளி நாட்டுக் கொள்கை பற்றியோ இரு கட்சியினருக்கும் அடிப்படை வேற்றுமை இல்லை.

குறிப்பு:—போட்டியிடும் இரு தலைவர்களும், மாகாண பிரதமர் இராஜாஜியைப் போல், கடவுள் பிரசாரம் செய்யவில்லை, கடவுள் பெயரால் ஓட்டுக் கேட்கவில்லை. மக்களிடம் தங்கள் கட்சியின் கொள்கையைச் சொல்லியே ஓட்டுக் கேட்கிறார்கள். எது ஜனநாயகம்,? வாசகர்களே யூகித்துக் கொள்ளவும்.

செகண்டரி கல்வி முறை பற்றி தீர்க்கமான பரிசீலனைக்கு ஏற்பாடு

இந்திய சர்க்கார பின்வரும் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு செகண்டிரி கல்விக் கமிஷனை நியமித்துள்ளது:—

1. டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார், சென்னை பல்கலைக் கழக அத்யட்சகர் (சேர்மன்); 2. திருமதி ஹன்சாமேதா, பரோடா பல்கலைக் கழக அத்யட்சகர், 3. திரு. காராபோரிவாலா, பம்பாய் சர்க்கார் தொழில் நுணுக்கக்கல்வி டைரெக்டர், 4. டாக்டர் ஸ்ரீமாலி உதயபுரி வித்தியாபவன தலைவர், 5 திரு. வியாஸ, பம்பாய் நியூஈரா பள்ளித் தலைமை ஆசிரியர். 6. திரு. சையிதெயின், மத்ய சர்க்கார் கல்வி இலாகாவின் கூட்டுக் காரியதரிசி, 7. திரு. பாசு டில்லி மத்தியக்கல்விக் கழகத்தின் தலைவர்; இவர்கள் போக இரு அந்நியர்கள் திரு. ஜான்கிரிஸ்டி, ஆக்ஸ்போர்ட் ஜீஸஸ் கலாசாலைத் தலைவர்; 9. டாக்டர் கென்னத் வில்லியம்ஸ் அமெரிக்க ஏர் பல்கலைக் கழகத்தின் கல்வியதிகாரியும் உள்ளனர்.

இந்தக் கமிஷன் தனது ரிபோர்டை சாத்தியமான அளவுக்கு துரிதமாக சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கமிஷன் ஏதாவது ஒரு இராச்சியத்தில் தங்கி தனது அலுவல்களைக் கவனிக்கும் காலத்தில் அந்தந்த இராச்சிய சர்க்கார் விரும்பினால் தனது பிரதிநிதி ஒருவரை இந்தக் கமிஷனில் அங்கத்தினராக நியமித்துக் கொள்ளலாம்.

இந்தியாவின் செகண்டரி கல்வியின் நிலைமை பற்றிய சகல அம்சங்களையும் பரிசீலித்தும், செகண்டரி கல்வியின் குறிக்கோள்கள், ஸ்தாபன அமைப்பு, பொருளடக்கம் பற்றி குறிப்பாக ஸ்தாபனரீதியில் திருத்தியமைப்பது, அபிவிருத்தி செய்வது குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி ஆலோசனை கூறுவதும், ஆரம்பக் கல்விக்கும், உயர்தரக் கல்விக்கும் செகண்டரி கல்விக்கும் இருக்க வேண்டிய உறவுப்பற்றியும், பலவிதமான செகண்டரி பள்ளிகளிடையே அமைந்திருக்கிறப்பரஸ்பர உறவு, இன்னும் இதர பிரச்சினைகளைப் பற்றியும் பரிசீலனை செய்து ரிபோர்ட் செய்வதே இந்தக் கமிஷனின் வேலையாகும்.

உதவி பெறும் ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர் யூனியன் (திருச்செந்தூர் தாலுகா)

வருஷாந்திர மகாநாடு

30-8-1952

(1) ஆரம்ப ஆசிரியர்கள் தேர்தலுக்கு நிற்பதைத் தடைசெய்யும் G. O. 1280ஐ ரத்து செய்யும்படி இந்த மகாநாடு வேண்டுகிறது.

(2) "முந்திய அரசாங்கம் வாக்களித்தபடி உடனடியாக செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் கிராண்டைக் கூட்டிக் கொடுப்பதோடு, எல்லா கிரேடு ஆசிரியர்களின் (ஆரம்பப் பாடசாலையில் வேலை செய்யும்) கிராண்டையும் விலைவாசிக்குத் தகுந்தபடி உயர்த்த வேண்டுமென இந்த மகாநாடு வேண்டுகிறது".

(3) "எட்டாம் வகுப்பு அரசாங்கப் பரீட்சையில் தேறும் மாணவர்கள் பெறும் சர்ட்டிபிகேட்டில் அவனது பெற்றோர் பெயர், படித்த பள்ளியின் பெயர், தலைமை ஆசிரியர் ஒப்பம் ஆக மூன்றும் சேர்க்கும்படி இந்த மகாநாடு வேண்டிக் கொள்ளுகிறது".

குலசேகரன் பட்டினம்
1—9—1952

R. M. கணபதி
அமைச்சர்.

கல்வியின் தரம் உயருமா?

எஸ். ஜி. வாமனமூர்த்தி, ஆசிரியர் : ஆரியகலா வித்தியாசாலை
ஏமனேஸ்வரம் P. O. (Via) பரமக்குடி S. I. R.

"கல்வியின் தரம் குறைந்து விட்டது." என்ற சொல் இன்று பண்டிதர்களிடத்திலிருந்து பாமரர்கள் வரை பரவியிருக்கிறது. பலர் இந்த இழி நிலை ஏன் ஏற்பட்டது என்று ஆர அமர ஆராயாது, ஆசிரியர்களை அலட்சியம் செய்யவும் முற்படுகின்றனர். கல்வியின் தரம் குறைய ஆசிரியர்கள்—குறிப்பாக ஆரம்பாசிரியர்கள்—பொறுப்பாளிகள் அல்லர் என்பதை சரியான காரணங்களுடனும் அனுபவ அத்தாட்சிகளுடனும் எடுத்துரைக்க ஆசைப்படுகிறேன் — ஆரம்பாசிரியனாக இருக்கும் காரணத்தால்.

"கல்வியின் தரம் குறைந்து விட்டதா?" என்று என்னைக் கேட்டால் "ஆம்" என்று ஒத்துக் கொள்ளத் தயங்கவில்லை. ஆனால் எந்த நிலையில் கல்வியின் தரம் குறைந்தது என்றால் உயர்தரக் கல்வி நிலையில்தான் "ஆரம்பக் கல்வியின் தரம் குறைந்து விட்டது" என்று அறிவுடைய சான்றோர் எவரும் இதுவரை கூற முன் வரவில்லை. ஆங்கிலம் முன்பு ஆரம்பப் பாடசாலைகளில் போதிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது அரசியலார் கட்டளை காரணமாக நீக்கப்பட்டு விட்டது. மற்றப் பாடங்கள் முன்போல்—ஏன் சற்று உயர்ந்த நிலையிலேயே—போதிக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக, நாம் உலக பூகோளத்தைக் கற்பிப்பதைக் கூறலாம். ஆனால் மறுக்கமுடியாத உண்மை, உயர்தரப் படிப்பின் தரம் குறைந்து விட்டதேயாகும்.

படிப்பின் தரம் குறைவது பயங்கரமானது; வருங்கால சந்ததியைப் பாதிக்கக் கூடியது; அரசாங்க அஸ்திவாரம் ஆட்டம் கொடுப்பதற்கும், அராஜக சக்திகள் வளருவதற்கும் இடந்தரும் ஆபத்தான சக்தியாக மாறும் ஆற்றலுடையது. இதை அறிந்து ஆவன செய்யவில்லை ஆட்சிப்பீடமேறிய ஆளவந்தார். "மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல்" என்றார் அதிவீர ராமபாண்டியனார். இந்த யோக்கியதையுடைய மந்திரிகள்—குறிப்பாக கல்வி மந்திரிகள்—எத்தனை பேர் நமக்கு இருந்தார்கள், இருக்கிறார்கள், என்பதே இந்நிலை ஏற்படக் காரணமாகும்.

ஆங்கிலேயன் இந்தியாவை விட்டகன்றான். ஆனால் ஆங்கில மொழியகலவில்லை. சர்க்கார் காரியாலயங்களிலும், வியாபார நிலையங்களிலும், நீதி மன்றங்களிலும் வழங்கப்படும் பாஷை ஆங்கிலம். அங்கு ஆங்கிலத்தின் அந்தஸ்து குறையவில்லை. ஆனால் ஹைஸ்கூல்களில் ஆங்கிலத்தின் மதிப்பு

குறைக்கப்பட்டது; மூன்றும் மொழியாக்கப்பட்டது. சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு இருந்த சர்வகலாசாலைப் பிரவேசப் பரீட்சையின் ஆங்கிலத்தின் தரத்திற்கும் தற்போது மிக்க வேறுபாடு காணப்படுகிறது. கலாசாலையிலும், கல்லூரியிலும் தான் ஆங்கிலம் அலட்சியம் செய்யப்பட்டதே தவிர, பொதுவாக அரசாங்க நிர்வாகத்திலோ, அரசியலிலோ, மற்ற துறைகளிலோ ஆங்கிலம் அலட்சியம் செய்யப்பட வில்லை. ஆகவே மாணவர்கள் படித்து பாஸ் செய்து விட்டு, வேலை பார்க்கும் பொழுது, வேதனையடைந்த பின்னர் தான், தவறு புலப்பட்டது. ஹைஸ்கூல்களில் பிரதேச பாஷைகள் போதனு மொழியாக்கப்பட்டது. ஆனல் காலேஜ்களில் ஆங்கிலமே போதனுமொழியாக இன்றைக்கும் இருந்து வருகிறது. ஆகவே கல்லூரி மாணவன் ஆங்கிலத்தில் பாடத்தைப் புரிந்துகொள்ள சிரமமுண்டாயிற்று. இம்மாதிரியான குழப்பங்கள் ஒரு புறமிருக்க, வேறுவகையான சங்கடங்களும் ஏற்பட்டன.

ஆசிரியர்களுக்குத்தான் பேச்சுரிமை, எழுத்துரிமை மறுக்கப்பட்டதே தவிர, அரசியல் வாதிகள் கல்வியைப் பற்றிக் குறைகூறவோ, கேவலமாகப் பேசவோ, தலையிடவோ மறுக்கப்பட வில்லை. இதனல் கல்விக்கும், கல்வித்துறையில் ஈடுபட்டவர்களுக்கும் ஏற்பட்ட இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

ஒரு கோஷ்டியார் கல்விமுறை காந்திய தத்துவப்படி அமைய வேண்டுமென்றனர். ஒரு குழுவினர் ஆங்கிலத்தின் வாடையே பள்ளிக்கூடங்களில் அடிக்கக் கூடாதென்றனர். ஒரு திருக்கூட்டத்தினர் ஹிந்தி கட்டாய பாடமாக்கப்பட வேண்டுமென்றனர். இதைப்போல் இன்னும் பலவிதங்களில் கல்வி சீர்திருத்தப்பட வேண்டுமென்றனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசை—காந்தியம், கம்யூனிஸம், சீர்திருத்தம், மறுமலர்ச்சி அவை எல்லாம் பூர்த்தி செய்யப் பள்ளிக்கூடம் தான் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதில் அவர்களுக்கு உள்ள சக்திப்படி பலன் கிட்டியது. ஏன் தெரியுமா? ஆசிரியர்களுக்கு பேச்சுரிமை, எழுத்துரிமை எல்லாம் அரசியல் சட்டத்தில்தான் நடைமுறையில் கிடையாது.

மாஜி மந்திரி மாதவமேனன் ஹைஸ்கூல்களில் எந்த மொழிக்கு எந்த ஸ்தானம் அளிப்பது என்பது பற்றி பட்ட அவஸ்தை அளவிட முடியாது. அப்போது அவர் பல அரசியல் தலைவர்களின் மோதுதல்களுக்கு ஆளானர். அதே சமயத்தில் ஒரு அறிக்கையில் தன்னுடைய உண்மையை ஒப்புக் கொண்டு விட்டார். "நான் கல்வியில் ஒரு நிபுணன் அல்லன்," "I am not an expert in education." என்று அவரே கூறினர். இந்நிலையில் நாட்டின் தேவைக்குகந்த கல்வி அளிக்கப்படுமா? கிடைக்குமா? அரசாங்

கத்தால் சட்டம் செய்ய முடியுமே யொழிய, கல்வி கற்பிக்க முடியாது. புதிய கல்வி மந்திரி டாக்டர் எம். வி. கிருஷ்ணாராவ் ஆதாரக் கல்வியைத்தான் எல்லாப் பள்ளிகளிலும் அமலுக்குக் கொண்டுவரப் போகிறேன் என்கிறார்! பாதி நாள் வேலை! பாதி நாள் பள்ளிக்கூடம் என்கிறார்! இன்னமும் என்னென்ன நடக்கப் போகிறதோ? கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிடத்தில் ஆலோசனை கேட்காது, செய்யப்படும் எந்த சீர்திருத்தமும் பயன் தராது என்பதைக் கல்வியில் ஆர்வமுடையோர் அனைவரும் அறியவேண்டும்.

பொருளாதார நிலையால், ஆசிரியர்களுடைய அந்தஸ்து மிகத் தாழ்மையானது. ஆகவே, கல்வியில் முழு கவனமும் செலுத்த சாத்தியமில்லை—சட்டமுமில்லை — என்பது வாஸ்தவமே. வேறு நல்ல வேலை கிடைத்தால் உபாத்தியாயர் உத்தியோகத்தை உதறித் தள்ளி விட்டுச் செல்ல, மறுக்கும் உபாத்தியாயர் கிடையாதென்றே சொல்லலாம். ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்காக, மாணவர்கள் ஸ்டிரைக் நடத்துகின்றனரென்றால், நமது சர்க்கார் கல்வியை எவ்வளவு தூரம் கவனிக்கிறது என்பது எல்லோருக்கும் புலனாகும்! ஆசிரியர்களின் நலத்தில் மாணவர்களுக்கு இருக்கும் அக்கறை அமைச்சர்களுக்கில்லையே!

மேலும் சூழ்நிலையின்காரணமாக, சிங்காரப்படங்கள் நிரம்பிய பத்திரிகைகள் வசீகரித்துக் கொண்டிருக்கும்போது, வாலிப மாணவன் எப்படி கல்வியில் கவனத்தைச் செலுத்துவான்? பரீட்சை எடுக்கப்பட வேண்டுமென்று புரட்சிக் கீதங்கள் கிளம்புகின்றன. அதற்கு அரசியல் வாதிகளின் ஆசியும், அரசாங்கத்தாரின் ஆதரவும் கிடைக்கிறது. அப்படியிருக்கும்போது மாணவன் பரீட்சையை அலட்சியம் செய்யமுற்படுவது இயல்பே. பரீட்சைக்குப் பயந்து பாடங்களைப் படிக்கும் தன்மையும் காணாமற் போவதில் ஆச்சரியமில்லை. கல்வியின் தரம் குறைய இதைப் போன்ற காரணங்கள் இன்னும் பல இருக்கின்றன.

கல்வியின் தரம் உயர, ஆசிரியர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். பேச்சுரிமை, எழுத்துரிமைத் தடையை நீக்க வேண்டும். கல்வியைப் புனிதமாக்கக் கருதி, கல்வி நிபுணர்கள் தவிர மற்றோரின் தலையீடு தடுக்கப்படவேண்டும். கல்வி முறையில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க, அனுபவமும், ஆர்வமும் மிகுந்த ஆசிரியர்களின் ஆலோசனைப்படி கல்வி முறையைத் திருத்தியமைக்க வேண்டும். இவைகளே, கல்வியின் தரம் உயர சாலச் சிறந்த வழிகள் என்பது என் கருத்து.

கல்வி...... அறிவு...... ஒழுக்கம்

(A. P. குமார், டீச்சர் போர்டு பாடசாலை, பெரியசாமிபுரம்.)

இயல், இசை, நாடகம் என்பவைகளை போல கல்வி, அறிவு, ஒழுக்கம் இவைகள் ஒன்றற்கொன்று சம்பந்தமுடையவைகள்: பல நூல்களைக் கற்று விட்டால் மாத்திரம் போதாது. கற்க வேண்டிய நூல்களை அதாவது தனக்கும், தன் வாழ்க்கைக்கும், பிறர்க்கும் பயன் தரத்தக்க நல்ல நூல்களைக் கற்று, சந்தேக விபரீதங்களைப் போக்கி, பயன் பெறுவதே கல்வியாகும்: எத்தனையோ புத்தகங்களைப் படிக்கிறான் ஆனால் படித்ததன் படி நடப்பதில்லை. "கற்றபின் நிற்க அதற்குத் தக" என்றார் பொய்யாமொழி வள்ளுவர்.

மனிதன் சம்பாதிக்க வேண்டியவைகளில் முக்கியமானதும் முதன்மையானதும் கல்விச் செல்வமே! கல்வி ஒன்றுதான் மனிதனை மனிதனாக்குகிறது: மனிதன் இறக்கும் பொழுது தன் உடைமைகளைக் கொண்டு செல்லுகிறானா? பின் ஏன் பிற செல்வங்களுக்காகப் போராடுகிறான்? சாகும்வரை பணம் அவனைப் படாத பாடு படுத்திப் பத்து விதமும் செய்து விடுகிறது: இதனால் எத்தனை இன்னல் அடைகிறான்? "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்றாரே வள்ளுவர் என்றால் கற்காதவனிடம் பணம் இருந்து பயனில்லை. பணம் படைத்தவன் படிப்பு உடையவனாக இருக்க வேண்டும் என்பதுவே பொருத்தமாகும். மனிதன் இறந்தால் கல்வி ஒன்றுதான் அவனுடன் செல்கின்றது. ஏனைய பொருள்கள் இடையே தங்கி விடுகின்றன. ஏன் இறந்தவனுடைய உறவினர்—உற்றார்—நண்பர்—மைந்தர்கள் உடன் சென்று விடுகிறார்களில்லையன்றோ! "தேம்பி அழுகின்ற மைந்தரும் சுடுகாடு மட்டே", 'காதற்ற ஊசியும் கூட வாராது காணுங் கடை வழிக்கே" என்றார் பட்டினத்தார். கற்றவனுக்குப் பிற பொருட்கள் தேவையில்லை. எங்கும் உள்ள பொருள்களும் கற்றவனுடையவே! கற்றவனுக்கு" யாதும் ஊரே, யாவரும் கேளிர்!"

"யாதானும் நாடாமால், ஊராமால் என ஒருவன்; சாந்துணையும் கல்லாத வாறு"

அறிவு என்பது ஆண்டவனால் அளிக்கப்பட்ட பொதுப் பொருளாகும். அதைப் பெருகச் செய்வது மனிதனின் கடமை: கல்வியின் மூலமாகத்தான் அறிவு பெருக வேண்டும்: இதனால் தான் எத்தனையும் பகுத்தறியக் கூடிய சக்தி ஏற்படும். நல்லது இது, கெட்டது இது, இன்ன காரியத்தைச் செய்தால் இன்ன நன்மை ஏற்படும். இன்ன கெடுதலைச் செய்தால் இன்னின்ன

தீங்குகள் உண்டாகும். மேலும் அத் தீவினைகள் செய்தவனையே சாரும் என்பவைகளைப் பகுத்தறியக் கூடியவனே மனிதனாகும். பகுத்தறிவு இல்லாதவன் மடையனாகக் கருதப்படுகிறான். மிருகத்திற்கும் அவனுக்கும் வித்தியாசமில்லை: பல புத்தகங்களைப் படித்து விட்டு, 'எல்லாம் படித்த மேதாவி' என நினைக்கிறான்: கற்கவேண்டியது எவ்வளவு? கற்றது எவ்வளவு? என்பதை மனிதன் சிந்தித்துப் பார்ப்பதில்லை: கலைத்தெய்வமாம் சரஸ்வதியின் திருவுருவப் படத்தை ஆயிரம் தடவை பார்க்கிறான். அவள் வீணையும் ஏடும் வைத்திருப்பதின் நோக்கம் என்ன? ஏன் அவ்வாறு அப்படம் சித்தரிக்கப்பட்டிருக்கிறது ஓவியப் புலவனால். என்பதைச் சிந்திப்பதில்லை: "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு" என்பதை தெரிந்தானில்லை. தில்லைச் சிதம்பரத்திற்கு நடராஜப் பெருமானைக் காணச் செல்லுகிறான்: நன்றாகக் கும்பிட்டுவருகிறான்: அந்தப் பெருமான் எந்தக் காலைத் தூக்கித் தாண்டவமாடுவதாக உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது? என்று கேட்டால் தயக்கமின்றி பதில் சொல்ல முடிவதில்லை. 'எங்க வீட்டு top மேலே bird வந்து sitting பண்ணுச்சு' என்று, சில புஸ்தகங்களைப் படித்துவிட்டு தஸ், புஸ் என அர்த்தம் விளங்காத அல்லது உச்சரிக்கத் தெரியாத இரண்டொரு ஆங்கிலப் பதங்களை தமிழ் சம்பாஷணைக்கிடையே புகுத்திப் பேசிவிட்டால் அறிஞனாகிவிட முடியுமா? தானே முற்றும் படித்தவன் எனக் கர்வம் கொண்டு மூடத்தனமான காரியங்களையும் செய்து, இதனால் வெற்றியடைந்ததாகக் கருதுகிறான் மனிதன்: இது கல்வியின் பயனா? கல்வியினால் ஏற்பட்ட அறிவின் செயலா? அறிவின் வழி வந்த ஒழுக்கமா? எது கல்வி? எது அறிவு? எது ஒழுக்கம்?

மோட்டார் சக்கரமும், மோட்டாரைத் திருப்பும் கருவியும் ஒன்றல்ல. இரண்டும் வெவ்வேறு பாகங்களாகும். மனமும் அறிவும் ஒன்றல்ல. இரண்டும் வெவ்வேறு. செப்பனிட்ட பாதை வழியே மோட்டார் செல்கிறது. காடு, முரடு, முள், புதர், பள்ளம் இவற்றின் பக்கம் சிறிது தவறிச் செல்லும், சக்கரம் அதன் வழியே திருப்புங் கருவியையும் மீறிச் சென்றுவிடும். பள்ளத்தை நோக்கிச் சக்கரம் உருண்டோடி, ஆபத்து உண்டாக்குகின்ற நிலைமையில் வலிமை பொருந்திய திருப்புங் கருவியை சாமர்த்தியமாக உபயோகித்து, நல்ல பாதையில் மோட்டாரைத் திருப்புகின்றவனே நல்ல டிரைவராகும். அஃதே போன்றுதான் அறிவும், மனமும். மனம் ஒரு குரங்கு. அதை அடக்கத் திறன்வேண்டும். கண்ட கண்ட இடங்களில் மனம் அலைந்து செல்லக்கூடும். சில சமயம் நான் அறிவையும் மீறி மனம் செல்லும்போது கெட்ட வழிகளில் செல்லும்போது,

மனத்தைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தவேண்டும். அறிவு என்னும் திருப்புங் கருவியால் மனமெனும் சக்கரத்தை நல்ல வழியில் திருப்புகின்றவனே அறிஞன் இந்த அறிவு, கல்வியால்தான் ஏற்பட வேண்டும். கெட்ட வழியில் செல்லும் மனத்தை அறிவால் நல்ல வழியில் செலுத்தும் வலிமை பொருந்தியவனே மனிதனாகக் கருதப்படுகிறான். குறளின் ஓர் தேன் துளி ஈண்டு தரப்படுகிறதையும் அருந்துங்கள்.

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின் பாலுய்ப்ப தறிவு"

வாழ்க்கை என்பது காடு முரடான தோட்டம்; அதில் பயங்கரமான சிங்கமும், கொடிய புலிகளும், விஷஜந்துக்களும் வசிக்கும். இவற்றிற்கிடையே வாழ்க்கை ரதம் கவிழ்ந்து விடாமல், அறிவு என்னும் புரவிகளைப் பூட்டி, சமத்துவம் என்னும் கடிவாளத்தைப் பிடித்து ஓட்டுகின்ற திறம்படைத்த சாரதியாய் விளங்க வேண்டுமென்றால் கல்வியைக் கற்றல்வேண்டும். அதனால் அறிவு பெருகவேண்டும். கல்லாதவனிடத்தும் அறிவு உண்டு என்றால் அது பயனற்றதாகும். அந்த அறிவால் அறிஞர்கள் நிறைந்த சபையிலே தோன்ற முடியாது. கெட்டசெயல்களும், கெட்ட எண்ணங்களும் வெற்றி பெறவேண்டுமானால், அந்த அற்ப அறிவு உபயோகப்படலாம். ஆனால் அதனால் ஏற்படும் வெற்றிகள் நிலைத்திரா என்பது தெளிவு.

தனக்கும், பிறருக்கும், ஐயறிவுடைய சிறிய ஜந்துக்களுக்கும் தீங்கு செய்யாதவையுமான கல்வியைக் கற்கவேண்டும். எவனொருவன் பிறருக்குத் தீங்கு செய்யாமலும், தீங்கு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை மனத்தால்கூட நினைக்காமலிருக்கிறானோ அவனே மனிதனாவான் நன் மக்களுடன் வைத்து 'எண்ணப்படுவான். எவனிடம் கல்வி இல்லையோ, எவனிடம் அறிவு இல்லையோ, எவனிடம் ஒழுக்கம் இல்லையோ அவன் மனிதனாகக் கருதப்படமாட்டான். மிருகத்தோடு வைத்து எண்ணப்படுவான். குறளின் இரண்டாவது தேன் துளி இதோ!:—

"விலங்கொடு மக்கள் அனையர்
இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்"

கல்வியும் அதனால் உண்டாகிற அறிவும் ஒருவனுக்கு ஏற்படுமானால் ஒழுக்கம் தானாக வந்துவிடுகிறது. ஒழுக்கமே உயர்குலம்; உயிரைவிட ஒழுக்கம் மேலானது 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார் வள்ளுவப் பெருந்தகையார்; ஒழுக்கம் இருவகைப்படும். ஒன்று நல்லொழுக்கம் மற்றொன்று தீய ஒழுக்கம். நல்ல ஒழுக்கம் என்பது பகுத்தறிவு, நியாயபுத்தி, எவ்வுயிர்களிடத்தும் அன்பு, பிறருக்குச் சேவை செய்தல் முதலியவைகளாகும். ஒழுக்கத்தை எவன்

தவற விடுகிறானோ அவன் நன்மக்களால் வெறுக்கப்படுகிறான். ஒழுக்கம் என்பது பொதுவாகும் ஆண்கள் மாத்திரமல்ல, பெண்களும் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். பெண்கள் ஒழுக்கத்தினின்றும் சிறிது தவறினாலும் இல்வாழ்க்கை இல்லா வாழ்க்கையாகிவிடும். பெண் குலம் கேவல நிலையடைய நேரிடும்.

'கற்றுப் பிறர்க்கு உரைத்துத் தாம் நில்லார் வாய்ப்படூஉம் வெற்றுரை' என்பதுபோல ஒழுக்கமில்லாதவர்கள் எத்தனை கல்வியைப் பயின்றாலும் பயனுடைத்தன்று. கற்ற கல்வியின் பயனால் பற்பல தரும முறைகளை அல்லது ஒழுக்க நெறிகளைப்பிறர் பயன்படுத்தற் பொருட்டு கூறுகிறான் என்றால் அவன் உண்மையில் கல்வியின் பயனால் அறிவும், அறிவின் பெருக்கால் நல்லொழுக்கமும் உடையவனாக இருக்க வேண்டும். 'மார்பிலே தாள்வடம் மனதிலே கரவடம்' என்பது போல சிலர் நன்கு கல்வி கற்றிருந்தும் கற்றதன்படி நடக்காதவர் அல்லது ஒழுக்கமில்லாதவர்கள் அறநூற் பொருள்களைச் சொன்னால் அதை ஒழுக்கமுடையவர்கள் கேட்கக்கூடாது. அவர்கள் தீய ஒழுக்கத்தை மறைத்து, தன் வஞ்சனையான எண்ணத்தை வெளிக்காட்டாமல் நடித்து, தம் சொல் திறத்தால் தம் போலிக் கொள்கைகளை அவர்களுக்கு உபதேசித்து விடுவார்கள். உண்மையில் நல்ல ஒழுக்கமுடையவர்கள் இவ்வாறு செய்யமாட்டார்கள்.

"ஒழுக்கமுடையவர்க் கொல்லாவே-தீய வழுக்கியும் வாயாற் சொலல்"

தீய ஒழுக்கமுடையவன் என்றைக்காவது ஒரு நாள் கெட்டுப் போவான். அவன் இம்மையில் இழிவு பெறுகிறான். அவனுக்கு என்றைக்கும் துன்பமே. தீய சொற்களைத் தப்பித் தவறி மறந்துங்கூட வாயால் சொல்லாதே எனக் கண்டிப்பான உத்தரவு கொடுக்கிறார். செந்நாப் போதார். மேலும் சொல்லுகிறார் :—

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீய ஒழுக்கம் என்றும் இடும்பை தரும்"

என்று

நல்லொழுக்கத்தால் சகல நன்மையும், இம்மையிலும், மறுமையிலும் பேரின்பப் பெரு வாழ்வு வாழலாம். சுதந்திர இந்தியா சுபிட்சமாக வாழ நல்லொழுக்கத்தை மறக்காமல் கடைப்பிடிக்க வேண்டும். இதனால் தான் கட்டுப்பாடு, அமைதி, நல்வாழ்வு இவைகளுடன் சுபிட்சமாக வாழ வழி உண்டு. ஆகவே கல்வி அறிவு, ஒழுக்கம் இவைகள் ஒன்றற்கொன்று சம்பந்தமுடையவை. மனிதனைப் பிறந்த ஒவ்வொருவனும் கற்கவேண்டிய நூல்களைச் சந்தேக — விபரீதமின்றிக் கற்று, அதனால் அறிவைப்பெருக்கிப் பெருமைபெற்று

(16-ம் பக்கம் பார்க்க)

அன்னை தந்த காட்சி

(T. A. சந்தக் குரூஸ் கூத்தேன்குழி)

மோஹன் வழக்கம்போல் ஊருக்கு மேல்புறமுள்ள குன்றுக்கு முன்னதாகவே சென்று ஆவலுடன் தன் காதலி சுந்தரியை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் வேளை, திடீரென அன்னை அங்கு தோன்றி.

"பிள்ளாய்! வா, சமீபத்தில் வா. சரிநிகர்சமானமற்று சந்திரனையும் தோற்கடிக்கும் வடிவாய்ப் புன்னகைபூத்து, இதோ உன்னை அன்புடன் வரவேற்க ஆவலாயிருக்கும் உன் அன்னையைப் பார்! அன்று பளிச் பளிச்சென்று மின்னிய என் ஆடை ஆபரணங்கள் அழுக்கேறி துருப்பிடித்து இன்று மங்கி வருவதைப்பார்! இன்று அந்நியர் என்னை ஆக்ரமித்து அடிமைப்படுத்த முயல்வது உன் அசட்டைத் தனத்தினாலல்லவா? போர்ப்பறையைக் கேட்டு மனமகிழ்ந்து எதிர் நோக்கி புறமுதுகு கொடாது வெற்றி கண்ட என் மக்களே, இன்று ஏன் இவ்வளவு தூக்கம். எழுந்திரு? வீறிட்டு எழுந்திரு! இதோ வாடி வதங்கும் உன் அன்னையை ஏறெடுத்துப்பார். என்னைச் சிறை செய்ய முன்னோக்கும் அந்நியரின் ஆதிக்கத்தைச் சுக்குநூறாகத் தகர்த்தெறிய உறுதி கொள். இவ்விருபதாம் நூற்றாண்டின் நூதன ஆடை ஆபரணங்களை விரைவில் நானணிந்திடச் செய்வீராக."

"அம்மா! வணக்கம் தரிசித்தேன் உன் அழகுறு பொன் மேனியை உன்னைக் காணும் பாக்கியம் பெற்ற எனக்கு இதுவன்றி பெருமகிழ்ச்சி ஏதுவுண்டு?! அம்மா வாட்டமெதற்கு? உன்னை முன்னிலும் பன்மடங்காய்ப் பாதுகாத்து, உந்தனின் அழகுயர் சோதிக்கதிர் பாரெங்கும் பரந்து நிற்க யாம் ஆவன செய்வோம் தாயே."

(இதன் பின்னர் ஓடோடியும் வருகின்ற தன் காதலி சுந்தரியை நோக்கி)

"சுந்தரி இதோ ஆச்சரியம் வாவா விரைந்தே வா."

"மோஹன், அப்படி என்ன விசேஷம் நடந்து விட்டது!"

"சுந்தரி, என்றும் யாரும் காணாத ஓர் ஆச்சரியம் மாட்சியைத் தாங்கிய காட்சி அதுதான் நம் தமிழன்னை தந்த காட்சி"

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் வழி ஒழுக்கமுடையவனாகி சிறந்து வாழவேண்டும். இம்மூன்று செல்வங்கள் முக்கியமானவைகள். இவைகளையே முதலில் மனிதன் தேடவேண்டும் பிறபின்.

"மோஹன், அன்னையின் தோற்றம் எப்படி இருந்தது?"

"சுந்தரி நம் தமிழன்னையின் திருவடிவை உரைக்கின்றேன். இப்படி உட்கார்ந்து கேள். திருவேங்கடநாதம் அன்னையின் சிரசின் மீது வெள்ளிக்கிரீடமாய் விளங்க, சிந்தாமணியாம் சீரிய மணியைச் சிரசிலணிந்தாள்; பத்துப்பாட்டாம் பசு மணி பதக்கம் சேர்ந்த வெண்பா மாலையாகிய ஒண் மணிமாலையை மார்பகத்தும், புறப்பொருளாம் பொன் மணி மாலையைக் கழுத்துப் புறத்தும், ஐங்குறு நூறும் சதமணி மாலையைக் கண்டத்திடத்தும், நத்து மூக்குத்தியென நன்னூலை மூக்கினிடத்தும், காதிலே கலம்பகமாக குண்டலகேசியையும், கைவளையல்களாக வளையாபதியையும், ஏனைய சிறு நூல்கள் தம்மை சிறு விரல்களிடத்துக் கணையாழியாகவும், இருபாதங்களுக்கும் ஓசை ஒலிக்கும் சதங்கையாகச் சிலப்பதிகாரத்தையும் அணியப்பெற்று பேரொளி வீச அவளிரு பாதங்களும் குமரி முனை தாங்கி நிற்க, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய முத்திக்குகளிலிருந்தும் சமுத்திர வேந்தர்கள் பேரொலியுடன் அல்லும் பகலும் சற்றேனும் தளராது தங்கள் மரியாதையைத் தெரிவிக்க, அவர்களுக்கு முன்பேயுள்ள தொடர் நாகங்கள் நீண்டு பரந்து உயர்ந்து கெம்பீரமுடன் நின்று சாமரம் வீசினர். காவிரி, தென் பெண்ணை, பாலாறு, வைகை, பொருநை, முதலியதிரு மடந்தையர் அன்னையின் பாதாரவிந்தங்களை நீராட்டித் தூய்மைப் படுத்திச் செல்கின்றனர். அப்பப்பா! அன்னையின் எழிலை ஏறெடுத்துப்பார்க்க ஏழாயிரம் கண்களிருப்பினும் போதாது."

"அன்னை உன்னைக்குறித்து ஏதேனும் விசாரித்தனளா?"

"சுந்தரி, என்னைக் குறித்து மட்டுமென்ன? உன்னைக்குறித்தும் விசாரித்தாள் அது என்னவென்று கேட்கிறாயா? தற்கால நாகரீக ஆடை ஆபரணங்கள் அணிவிக்க வேண்டுமாய்க் கேட்டாள். அதில் உன்னைக் குறித்தும் கேட்டதுதானே."

"சரி அதெல்லாம் இருக்கட்டும். நம் அன்னையின் அழகுமிகு திருமேனியை அந்நியர் எவரும் அறிவாரா?"

"சுந்தரி, நம் சகோதரர்கள் மட்டுமல்ல, அந்நியர் பலரும் நம் அன்னையின் அலங்காரஸ்வரூபத்தை அறிந்து மகிழ்கின்றனர். குறிப்பாகக் கூறவேண்டுமெனில் ஐந்திலக்கணத்தொன்னூல் விளக்கத்தையும், தேம்பாவணியையும் ஆக்கிய வீரமாமுனிவரின் பிறப்பு நாடாகிய இத்தாலியிலும், செந்தமிழ் எழுதும் ஆற்றலுள்ள ஷூலியாங் வாங்ஷாங் பிறப்பு நாடாகிய பிரான்சிலும், அரிய ஞானத்திரட்டாகும் திருவாசகத்தைக் கூசாது ஆங்கிலத்தில் திருப்பிய போப்பின் பிறப்பு நாடாகிய இங்கிலாந்திலும், கைவல்ய நவநீதம் என்னும் பெயர் தாங்கும் தமிழ் அறி

வுநூலை ஆங்கிலத்தில் வன்மையுடன் மொழி பெயர்த்தளித்த க்ரௌல் பிறப்பிடமாகிய ஜெர்மனியிலும், மெய்கண்ட சாத்திரத்தில் சில பகுதிகளை ஆங்கிலத்தில் முயற்சியுடன் திருப்பிய ஹாய்சிங்கிடன் பிறப்பகமாகிய அமெரிக்காவிலும் மற்றுமுள்ள மேற்றிசை நாடுகளிலும், சிங்களம், புட்பகம், சாவகம் ஆகிய தீவுகளிலும், தென் ஆப்பிரிக்க நாடுகளிலும் நம் அன்னையின் அருள் ஒளி கதிர் விட்டு வீசுகிறது."

"மோஹன், நாம் அன்னைக்குச் செய்யும் தொண்டுகளில் சிறந்தது யாது?

"சுந்தரி, அன்னையை நம் மனத்திலிருத்தி, அவளையே நம் நாவிலும் நடம் புரியவிட்டுப் பூசித்து வருவதோடு, பல்வேறு அயலவரும் நம் அன்னையின் பெருமையை அறிய அவளது ஆபரணங்களை மீண்டும் மீண்டும் துளக்கி, நவீன கால நாகரீக ஆபரணங்களையும் அணிவித்து எங்கும் சுடர் விட்டு விளங்கச் செய்யவேண்டும்.

"மோஹன், அதுவே சரி, நேரமாகிறது போகலாம். வா வாழ்க தமிழகம் வாழிய தமிழன்னை.

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94–95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்	(ஆங்கிலம்)	100	ரூ. 2–8
ரிகார்ட் ஷீட்டுகள்	(ஆங்கிலம்)	100	ரூ. 2–0
பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்	(ஆங்கிலம்)	100	ரூ. 2–0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள்	(ஆங்கிலம்)	100	ரூ. 1–0
வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள்	(ஆங்கிலம்)	100	ரூ. 2–0

(தபால் செலவு உட்பட)
ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல்
முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

மலையும் மடுவும்

MAY 1955
MADRAS

1949-ஆம் ஆண்டு கல்லூரி வகுப்புக் கதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை

எழுதியவர்: இரா. சீனிவாசன்.
மாநிலக் கல்லூரி, சென்னை.

அன்று கச்சேரி, மாலை ஆறு மணிக்கே மக்கள் திரள் திரளாகக் கூடிவிட்டனர். கேட்கவும் வேண்டுமோ, பிரபல சினிமா நட்சத்திரத்தின் கச்சேரி என்றால், எள் விழவும் இடமின்றி யிருந்தது. 'இசையரசி' என்று புகழ்பெற்ற அவள், தன் திறனையெல்லாம் காண்பித்துக் கொண்டிருந்தாள். இரசிகத் தன்மையுடையோர் சிலர் தம்மை மறந்து தலையாட்டவும்; அதைப் பார்த்துச் சிலர் தாமும் செயற்கையாகத் தாளமிடுவதுமாகவும் இருந்தனர்.

பெண்கள் தங்கள் 'கச்சேரியை' நடத்திக் கொண்டிருந்தனர் அஞ்சாநெஞ்சத்துடனே! அவர்கள் உண்மையிலேயே பாட்டிலே இலயித்திருந்ததாகத் தெரியவில்லை! வருகின்றவர்களின், சேலைகள் நகைகள் இவைகளைப் பார்த்து மதிப்புப் போட்டுக்கொண்டும்; குடும்ப வரலாறுகளை ஆராய்ந்து கொண்டுமிருந்தனர். அவர்கள் அங்கும் இங்கும் போய்க் கொண்டிருந்தது இசையரசியின் கீதங்களுக்குநாட்டிய மாடுவது போன்றிருந்தது. அவர்கள் வளையல்களின் "கல கல" என்ற ஓசை பக்கவாத்தியம் போன்றிருந்தது!

இவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் தான் இசையரசி பாடிக்கொண்டிருந்தாள். "மாயா உலகை மதியாதே", 'நாடகமே உலகம்' என்ற பாட்டுக்களைப் பாடும்பொழுது 'இரசிகர்கள்' அப்படியே சொக்கிப்போய் விட்டார்கள். "என்ன உருக்கமாகப் பாடுகிறாள்; குரல் தான் என்ன லாவகமாக ஊற்றிலிருந்து வருவதுபோலிருக்கிறது; இதன் காரணமாகத்தான் நகரத்தில் இருந்த குயில்களெல்லாம், வெட்கி நாட்டிற்கு ஓடிவிட்டன போலும்" என்று கூறவில்லை; நினைத்துக் கொண்டார்கள். ஆனால் எனக்குச் சிரிப்புத்தான் வந்தது!!

அப்போது தான்என் நண்பன் இராகவன் வந்தான். அவனும் நானும் இணை பிரியாத் தோழர்கள். சிறு வயது முதற்கொண்டு எங்களிருவரிடமும் ஒரே வேற்றுமை இருக்கிறதென்றால் அது படிப்பில் தான்! அவன் நன்றாகப்படித்து முதல் வகுப்பில் தேறுவான். நான் முற்றுகையிடுவேன்: அவ்வளவுதான்!

"ஏம்பா! சேகர்! வைத்தகண் எடுக்கமாட்டாய் போலிருக்கிறதே! பொறு! அப்பா! இன்றைக்கு மட்டும்! நாளை முதல் பார்த்துக்கொண்டேயிரு; நாங்கள் வரமாட்டோம்" என்று மடமடவென்று பேசிவிட்டான்.

இருந்தவர்கள் எல்லோரும் சிரித்தார்கள். என்ன செய்வது நானும் சிரித்தேன்!

எனக்கு மாலையொன்று போட்டு 'அவளுக்குப்' போடும்படி மற்றொன்றைக் கொடுத்தான். நான் மறுத்தேன். அவனா விடுபவன்? மேலும் நல்ல வாய்ப்புத்தானே!

'அவளை' நான் முதன் முதலில் மணப்பந்தலில்தான் பார்க்க முடிந்தது; அதுவும் திருடனைப் போல் பயந்து கொண்டு! நான் பரீட்சையின் முடிவைக்கூட அவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்ததில்லை. மேலும் என் அம்மா கலியாணம் ஆவதற்கு முன்பே 'என் ஆவலை'த் தூண்டி விட்டுக் கொண்டிருந்தாள்.

"டேய் சேகர்! நீ ரொம்ப அதிஷ்டசாலியடா! உனக்கு 'வரப்போகிறவ' யார் தெரியுமா? அசல் மேனகையே தாண்டா!"

"அம்மா! அப்படியானால் என் 'தவசைக்' கெடுத்து விட்டு ஓடிப் போய் விடுவாளா?" என்றேன்.

"உனக்கு எப்பவும் குறும்பு தாண்டா! அவளைப்போல அழகியைப் பார்த்திருக்கமாட்டே! பணத்தில் தான் என்ன? இலட்சுமியே தான்! ஆனால் ஒன்று மாத்திரம் மறந்து விடாதே அப்பா! அவள் அழகிலேயெங்கி எங்களையெல்லாம்......" என்று சொல்லிச் சிரித்தாள்!

* * *

பக்கத்திலே வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் பலப்பல குவிந்து கிடந்தன. கல்லூரி நண்பர்களிடமிருந்தும் ஏராளமாக வந்தன. அவைகளை ஒவ்வொன்றாகப் படிக்க ஆரம்பித்தேன். சிரிப்புத்தான் வந்தது! என்னைப் பற்றி இவ்வளவு புகழ்ந்திருப்பதற்குக் காரணம்? நானா அல்லது பணமா?

கடைசியாக ஒரு கசங்கிய கடிதம்—வண்ண மலரிடையே காட்டுப் பூப்போல—சந்திரனிடத்தே உள்ள களங்கத்தைப் போல—கிறுக்கின விலாசம். மாசு படிந்த கவர். பிரிக்கக்கூடப் பிரியமில்லை!

இருந்தாலும் மனம் கேட்கவில்லை. பிரித்தேன். ஆனந்தக் கடலில் மூழ்கியிருந்த நான் பெரும் புயல் ஏற்படுமென்று எதிர்பார்க்கவேயில்லை. ஆத்திரமும் கோபமும் அடுக்கடுக்காக வந்தன. நசுக்கி எறிந்தேன். உருண்டு உருண்டு குப்பையில் போய்ச் சேர்ந்தது!

சூரியன் உதிக்கப் பனி மறைவதுபோல், என் மகிழ்ச்சியெல்லாம் எங்கோ மறைந்து சென்று விட்டன. மனதிலே ஒரு பெரும் போராட்டம். உடலெல்லாம் வியர்த்து விட்டது; கண்களிலிருந்து நீர் என்னையறியாமல் கசிந்து கொண்டிருந்தது. 'நான் எங்கு இருக்கிறேன்' என்ற நினைவே அற்றுக் கிடந்தேன். சென்ற கால நினைவுப் படங்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்தன.

நான் தஞ்சை 'கலெக்டரின் மகன். ஒரே பிள்ளையாதலால் மிகவும் செல்வமாகவே வளர்க்கப்பட்டேன். எவ்வளவு செல்வமாக வளர்க்கப்பட்டேனோ அவ்வளவு மக்காயிருந்தேன் படிப்பில். எப்படியோ சமாளித்து 'பி. ஏ' தேறி விட்டேன். 'பணத்தாலா? தகுதியாலா?'' என்று மாத்திரம் கேட்காதீர்கள்!

படிப்பு முடிந்ததும் அத்தையின் ஊருக்குப் புறப்பட வேண்டியதாயிற்று. அப்பாவின் வற்புறுத்தலினால் என் அத்தையின் ஊர் அந்த ஜில்லாவிலேயே பெரிய கிராமம்; புகழ் பெற்றதுங் கூட. அதில் அழகிய மெத்தை வீடு என் அத்தையின் வீடுதான். இதற்கு எதிரில் ஒரு சிறு குடிசை. மலையின் எதிரே மடுவைப்போல!

ஒரு நாள் எதிர் குடிசையிலிருந்து ஓர் அழகிய மங்கை குடமெடுத்துச் செல்வதைக் கண்டேன்.

சேற்றில் செழுங்கமலமா? என்னையறியாமல் ஓர் உணர்ச்சி என் உடல் பூராவும் அலைபாய்ந்தது. நான் எத்தனையோ நாகரிக மங்கைகளைக் கல்லூரியில் பார்த்திருக்கிறேன். ஆனால் இவளிடத்தில் மாத்திரம் ஏனோ இந்தக் கவர்ச்சி? பவுடர் பூசாத முகம்தான்—கோதிவிட்ட கூந்தல்தான் — கிழிசல் துணிதான் — இருந்தும்......? என்னையறியாமல் என் கால்கள் அவள் வெளி வரும் நேரத்திற்குத் தெருவில் இழுத்துச் செல்லும. அவளும் என்னை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டு சிரித்துச் செல்வாள்.

கோடையும் மாரியும் மாறி மாறிச்சென்றன. எங்கள் "காதல் நாடகமும்" நாளுக்கு நாள் வளர்ந்து தனிமையில் சந்திக்கும் அளவிற்கும் ஏற்பட்டு விட்டது.

ஒரு நாள்

"கமலம்! உனக்காக நான் எவ்வளவு நேரம் காத்திருந்தேன் தெரியுமா?"

"என்னை மன்னிச்சுடுங்க அத்தான்! அம்மா இப்பத்தான் தூங்கினாள்"

"ஏன் கமலம்! உன் முகம் கவலையில் தோய்ந்திருக்கிறது.

"ஒன்றுமில்லையே!"

"நீ சிரித்து மறைக்க முயன்றாலும் உன் முகம்தான் பளிங்கு போல் காட்டுகின்றதே! கமலம்! என்னிடம் கூட வா சொல்லமாட்டாய்?"

"என்னென்று சொல்லுவது அத்தான்! நம் கனவு இலட்சியமற்றது. அவ்வளவு தான்! ஊம்".

"ஏன் கமலம்! நான் பணக்காரன் - நீ ஏழை - நான் மலை — நீ மடு — என்று தானே நினைக்கிறாய்! அட பைத்தியமே! எனக்குப் பணமா பெரிது! உன் அன்பு தானே!"

"அதல்ல! அத்தான்!"

"பின், நான் உயர்ந்த சாதிக்காரன். உன்னை எப்படிக் கலியா

மணிமொழி அந்தத் தோட்டத்திற்குச் சென்று, அங்குள்ள கிணற்றின் மதிலின் மேல் உட்கார்ந்தாள். "காதல் வேண்டுமா? கலைக் கூடம் வேண்டுமா? கலியாணம் வேண்டுமா? அல்லது இந்த ஊரை விட்டு ஓட வேண்டுமா?" என்ற சஞ்சலத்திலே மூழ்கியிருந்தாள். அவளது சஞ்சலத்தைக் கலைத்து ஓர் நல்ல நீதியை, எதிரில் தோன்றிய இயற்கைக் காட்சி சித்தரித்தது.

காலையிலே கிழக்குத் திக்கில் கதிரவனைக் கண்டு களித்தது. பகலவன் உயர உயர தானும் உயர்ந்து உச்சியைப் பார்த்தது. கதிரவன் தாழ்ந்து வந்து மறையும் நிலையில் இருக்கிறான். அதுவும் அப்படியே அசையாது கண்டபடியே நிற்கிறது. அந்தச் சூரிய காந்தி மலருக்குத்தான் எவ்வளவு அன்பு, அந்த ஆதவன் மேல், 'நன்றி மறப்பது நன்றன்று' என்னும் வள்ளுவரின் உரைபடி, கதிரவன் தனக்கும், இந்த உலகத்திற்கும் செய்யும் நன்றியை மறவாது, தனது வாழ்நாள் முழுவதும் அவன் தியானத்திலேயே கழிக்கிறது. அந்தக் காட்சி மலராகிய நான், ஒரே லட்சியத்தில் என் வாழ்நாள் முழுவதையும் கழிக்கின்றேனே, பகுத்தறிவு பெற்ற நீ ஏங்கித் தவிக்கிறாயே! என்று ஏளனம் செய்வது போல மணிமொழிக்குத் தோன்றியது. அதே சமயம் தொடர்ந்தாற் போல வெவ்வேறு காட்சி!

கதிரவன் பிரிவினால் மலருக்கு ஏற்பட்ட ஏக்கத்தை மாற்றி, இன்பம் உண்டாக்க ஓடி வந்தது ஓர் பூச்சி. அந்த அழகிய மலரின் இனிய மதுவினை இன்பமுடன் பருகி, அந்த மலரின்மேல் ஆனந்தக் கூத்து ஆடுகின்றது தேன் பூச்சி. அந்த மலரும், மகரந்த சேர்க்கையின் மகிழ்ச்சியினால் மனங்களித்து, தனது இதழ்களை இன்பமுடன் ஆட்டி, அது அடையும் ஆனந்தத்தை அறிவிக்கிறது. இந்த ஆனந்தக் காட்சி ஐந்து நிமிடங்கள் நடந்தது. அந்த மலரை விட்டுப்பறந்துசென்றது தேன் பூச்சி. அதே சற்று நேரத்திலே 'ரிங்ங்' எனும் ரீங்காரத்துடன் வேறொரு தேன் பூச்சி அதே மலரில் வந்து உட்கார்ந்தது. ஆனால் முன்போன்ற ஆனந்த நிலையை இரண்டும் அடையவில்லை. உட்கார்ந்த உடனேயே வெறுப்புடன் பறந்தது தேன் பூச்சி. அந்த மலரும் அதை விரும்பாதது போல பலமாக அடித்தக் காற்றின் உதவியால் பக்கத்தில் திரும்பிக் கொண்டது. இரண்டினிடம் காணப்பட்டது வெறுப்பு. ஜெயக்குமாரை மணந்தால் இந்த நிலையே ஏற்படுமென்று அறிந்தாள் மணிமொழி. அதே சமயம் கோவிலுக்குச் செல்லும் சில பெண்

கள்பேசிக் கொள்வது மணிமொழியின் காதில்விழுந்தது.

"வள்ளி! இன்று வந்தவர்கள் எல்லாம் ஜெயக்குமாரை எவ்வளவு புகழ்ந்தார்கள் தெரியுமா?"

"அவன் தலையில் இடி விழ! அவன் வஞ்சகச் சூழ்ச்சிக்கு ஆளாக இன்னும் எத்தனை அப்பாவிப் பெண்கள் இருக்கிறார்களோ?"

"போடி, ஜானகி! அவரை எப்பொழுதும் வைவது தான் உன் வேலை" "நீ வேண்டுமானால் நாளை மாலையில் குளத்திற்கு தனிமையில் போய்வா. அப்புறம் அவனைப்பற்றி தெரிந்துக் கொள்வாய். நேற்று தூக்கு மாட்டிக் கொண்டு இறந்தாளே வனிதா! அதன் காரணம் உனக்குப் புரியுமா? அந்தப் படுபாவி அவளைத் திருமணம் செய்வதாகச் சொல்லி தனது வஞ்சக வலையிலே சிக்க வைத்தான். வனிதா மூன்று மாதக் கற்பவதியானாள். அவன் அவளைக் கை விட்டான். அவளுக்கு அபயம் கொடுத்து ஆதரித்தது காவிரியாற்றின் கரையில் இருக்கும் ஆலமரம். ஜெயக்குமார், காமக் கலையிலே கை தேர்ந்த பிராணி" அதற்கு மேல் மணிமொழியின் காதில் ஒன்றும் விழவில்லை. அவளது உடல் நடுங்கிற்று. "அவன் வேண்டுமானால் தேன் பூச்சியாக அலையட்டும்! நான் மலர் இல்லை; பகுத்தறிவு வாய்ந்த மங்கை! என்று விரைந்தோடினாள் அவ்விடத்தை விட்டு.

வீட்டில் நுழைந்தவுடன் ஓர் கடிதம் அவள் கண்ணில் பட்டது.

அன்புள்ள மணிமொழி!

நீ ஜெயக்குமாரை மணப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி! உங்கள் திருமணத்திற்கு இடையூறாக இருக்க நான் விரும்பவில்லை. ஆனால் உனக்குப் பழந்தோழன் என்ற முறையில் ஒன்றுகூறுகிறேன். கலைக் கூடத்தைக் கண் போன்று காத்து வருவாயாக. எனக்குக் கலைக் கூடத்தின் கடைசி நாள் இதுவே.

உனது தோழன்,

மணிவண்ணன்.

இக்கடிதத்தைக்கண்ட மணிமொழி என்ன செய்வதென்று திகைத்தாள். பக்கத்திலுள்ள பாதையின் முன்பு ஓர் உருவம் வேகமுடன் நடந்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். விரைந்தோடினாள் அதைப் பிடிக்க. அது மணிவண்ணன் உருவந்தான். "குரங்கேறகாத கொம்பு இல்லை" கற்றோர்க்கு சென்ற விடமெல்லாம் சிறப்பு. இவர்கள் எங்கு சென்ற போதிலும் ஓர் கலைக்கூடம் அமைத்து விடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

"அதோ பாருங்கள் வானத்திலே!"

"அட! அசடே! நான் யாரோ என்றல்லவா பயந்து விட்டேன்! அதோ பார்! நீ சொன்னதைக் கேட்டு விட்டான் போலிருக்கிறது அந்தத் திருட்டுச் சந்திரன். முகத்தையே மூடிக்கொண்டானே!" 'இப்போது ஏன் உனக்கு வெட்கம்? இங்கே வா... ....';

* * *

மேன்மாடியில் தான் மண அறை இருந்தது. என்னை வழியனுப்பி விட்டுஎல்லோரும் சிரித்துக்கொண்டே சென்று விட்டார்கள். மெதுவாக ஏறினேன், மாடிப் படியை ஒவ்வொன்றாக. என்னையாரோ சம்மட்டி கொண்டு அடிப்பது போன்றிருந்தது. திருடனைப்போல என் இருதயம் 'படக்' 'படக்' என்று அடித்துக்கொண்டிருந்தது. நெற்றியில் வியர்வை வழிந்தோடியது. ஏதோ 'கிரீச்' என்ற சப்தம். நடுங்கியே விட்டேன். திரும்பிப் பார்த்ததில் ஓர் அணில்! என்னைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டிக்கொண்டே கத்திக் கொண்டு ஓடிற்று. அது சொல்லிற்று; 'நான் எவ்வளவு தைரியசாலிபார் நான் ஒரே பழத்தையா புசிக்கிறேன். இனிப்புள்ள பழங்கள் எல்லாவற்றையும் தான் சுவைத்துப் பார்க்கிறேன்! என் வாழ்க்கையே இப்படித்தான்! இதிலே தான் என்ன ஆனந்தம்!"

என் உடம்பில் ஒரு புது உற்சாகம் ஏற்படுவது போன்றிருந்தது. சற்று வேகமாகவே சென்றேன். ஏதோ விம்மும் சப்தம் கேட்டது. கதவண்டை நின்று உற்றுக் கேட்டேன். அவள் ஏன் அழவேண்டும்?' எனக்கு ஒன்றுமே புரியவில்லை. மெதுவாகத் திறந்தேன். அவள் எழுந்து அவசரமாக முகத்தைத் துடைத்துக் கொண்டு நின்றாள்.

அறையில் சந்தனப் புகை சூழ்ந்து கொண்டிருந்தது. என் மனதில் உள்ள இருளைப் போல! மெழுகு வர்த்தி மங்கிய வெளிச்சத்துடன் எரிந்து கொண்டிருந்தது.

"ஏன் அழுகிறாய்?" என்றேன் குளறியபடியே.

மௌனம் சாதித்து மெழுகு வர்த்தியையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளும் அதைப் போன்று உருகுகின்றாள் என்பதற்காக?

"உன் குறை என்ன சொல்! என்னால் முடியுமானால் தீர்க்கின்றேன்" என்றேன் பெருமூச்சு வாங்கிக் கொண்டே!

"என் குறையை யாரால்தான் தீர்க்க முடியும்? இனி மேல்!" என்று அழுதுகொண்டே மெதுவாகக் கூறினாள்.

"அப்படியானால் உனக்கு இந்தக் கலியாணமே பிடிக்கவில்லையா? நான் என்னகுற்றம் செய்தேன்?" 'ஏன் அழுகிறாய்?"

"நீங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை. நான் தான் குற்ற

வாளி! என் மனதை மற்றொருவருக்குப் பலி கொடுத்து விட்டு, விருப்பற்ற வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று நினைக்கும் போது நான் அழாமல் வேறு என்ன செய்ய முடியும்?''

"யார் அந்த அதிர்ஷ்டசாலி?"

"யாராயிருந்தாலென்ன? நான் உங்கள் மனைவியாக ஆக்கப்பட்டு விட்டேன். உயிரற்ற சடலம் போன்று என் வாழ்நாளெல்லாம் உண்மையாகவே உழைக்கிறேன். நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? உங்கள் மனதைப் புண்படுத்தியதற்காக மிகவும் வருந்துகின்றேன்!"

"யார் அவர்? சொல்லமாட்டாயா? 'கணவன்' என்ற அதிகாரத்தோடு கேட்கிறேன்! சொல் அதனால் எனக்குக் கிஞ்சித்தேனும் மனக்கஷ்டம் ஏற்படாது! தைரியமாகச் சொல்!"

"உன் நண்பர்—என் அத்தை மகன்—இராகவன்!"

"என்ன! இராகவனா?"

"ஆம்!"

"ஏன் உன் பெற்றோர்கள் அவனை மணக்கச் சம்மதிக்கவில்லை;" அவன் எதில் குறைந்தவன்? அறிவிலா?" ஆற்றலிலா?

"ஆம்! பணத்தில்தான்! அவர் தகப்பனார் செல்வந்தராக இருக்கையில் எங்கள் இருவருக்கும் மணம் முடிக்க இரு பெற்றோர்களும் ஒப்புக் கொண்டனர். ஆனால் திடீரென்று அவர் தகப்பனார் இறந்தார். 'வாக்கும்' இறந்தது. அவர் 'நாதியற்ற ஏழை' என்பதற்காக என்னை அவருக்குக் கல்யாணம் செய்து கொடுக்கவில்லை!

"சரி! இதோ வருகிறேன்!" என்று ஏதோ ஒரு புத்துணர்ச்சியுடன் வெளியே சென்று விட்டேன். மெழுகு வர்த்தியும் திடீரென்று பிரகாசித்தது.

* * *

மூன்று நாட்களுக்குப் பிறகு—

காலையில் செய்தித்தாள் ஒன்றைப் பிரித்தேன். அதில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

"சமீபத்தில் கலியாணம் செய்து கொண்ட தஞ்சை 'கலெக்டர்' மகன் சேகர் பி. ஏ. என்பவரும் அவருடைய மனைவியும், இருவரும் விரும்பி, விவாகரத்து செய்து கொண்டனர். அதே தினத்தில் சேகரின் நண்பர் இராகவன் B.A. (Hons.) என்பவர் அவளைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டார், கோர்ட் முன்னிலையிலே!"

இதைப் படித்ததும் எனக்குச் செய்யமுடியாத ஒன்றைச்செய்து விட்டது போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

* * *

நேரே அத்தையின் ஊருக்குச் செல்லப் புகை நிலையத்திற்குச் சென்றேன்! ஊர் ஏதோ அமர்க்களப்பட்டிருந்தது. ஏனென்று விசாரித்தேன். 'மாடி வீட்டு எதி

ரில் வசித்த கமலம் என்பவள் தற்கொலை செய்து கொண்டாள்' என்றார்கள். நிஜமாகவா? ஐயோ!' என்று கத்திக்கொண்டே ஓடினேன்; என் நிலை தெரியாமல்.

*   *   *

"ஏண்டி! பசங்களா! ஏன் அவளைப் பார்க்கிறீர்கள்! அவள் முகத்திலே விழிச்சாலே பாபமாச்சேடி! விபசாரி! நம் ஊருக்கு என்று வந்து சேர்ந்தாளே! என்று வசை புராணம் பாட ஆரம்பித்தாள் ஒரு கிழவி.

"விபசாரிக்குப் பிறந்த குழந்தையைப் பார்த்தாயோ! தங்க விக்கிரகம் மாதிரின்னா இருக்கு; போயும் போயும் இந்த விபசாரிக்கா பிறக்கவேண்டும்! அதையும் கொன்னுட்டு சாவறதானே?" என்று வம்பளந்து கொண்டிருந்தாள் ஒருத்தி.

"இந்த ஊருக்கு வந்த அபசாரத்தைப் பார்த்தேளோ இந்த ஊர் மகிமையில்லோ கெட்டுப் போயிடுத்து. அமங்கலிக்கு ஒரு குழந்தையா? அபசாரம்! அபசாரம்! அப்போதே சொன்னேனே கேட்டேளோ? நம்ம ஜாதித் தெருவிலே சூத்திரச்சிகளை விடலாமோ! இந்தப் பாபத்திற்கு என்ன செய்வது?" என்று ஒரு புரோகிதர் புராணம் பாட ஆரம்பித்து விட்டார்.

"நம் குலத்துக்கல்லவோ அவமானம்! அடிபாவி! நீ எங்கேயிருந்து வந்தேடி! எங்கள் குலத்தைக் கெடுக்க! சண்டாளி! சேகரை ஊருக்கு அழைத்ததே தப்பாய் விட்டதே! அவன் என்ன செய்வான்? எல்லாம் இந்தக்கள்ளியின் வேலைதானே! பணம் செலவழித்தாவது இந்தச் சமாசாரத்தை எப்படியாவது வெளியிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தான்!" என்று சேகர் அத்தை அங்கலாய்த்தாள்.

"துரோகிப் பயல்! ஒரு பெண்ணை அநியாயமாகக் கெடுத்து விட்டு ஓடிவிட்டானே! பேடிப்பயல்! ஜாதி பணம் என்ற திமிரினால் தானே!

"பேதை - ஏழை – என்பதற்காக அவளையல்லவா தூற்றுகிறார்கள்.......மறுபடியும் அவன் இந்த ஊர்ப்பக்கம் வரட்டும்! அவன் தலையைத் திருகி விடுகிறேன் பார்!" என்று கர்ஜித்தார் ஓர் முரட்டுச் சீர்திருத்தவாதி!

*   *   *

ஓடினேன் அவள் இருந்த இடத்திற்கு. என்னால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. அவளைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன் சில நிமிடங்கள். நா எழவில்லை. கை கால்கள் ஆடவில்லை. [அவள் உடல் கேட்பாரற்றுக் குப்பை மேட்டுக்கருகே கிடந்தது. உடலெல்லாம் புழுதி படிந்திருந்தது. ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. அவள் பக்கத்திலே ஒரு குழந்தை அழுதுகொண்டிருந்தது; துணி ஒன்றுமில்லாமல்.]

தொண்டையைப் பிடித்துக் கொண்டு 'வந்தது துக்கம். 'ஓ

என்று கதறினேன். புரண்டேன். மண்டையில் இடித்துக் கொண்டேன். சொக்காயைக் கிழித்தேன் வெறி பிடித்தவன் போல் அவள் முகத்தையேபார்த்துக்கொண்டிருந்தேன். மடியின் மீது வைத்துக்கொண்டு கதறினேன். பல முத்தங்களிட்டேன், என்னவெலாம் பிதற்றினேன்! என்னையே மறந்தேன்!

மறுபடியும் கண் திறந்த போது 'அவள் மயானத்தில் வெந்து கொண்டிருப்பதாகக் கூறினார்கள். என் மனமும் வெந்து கொண்டிருந்தது ஓடோடினேன். 'கமலம்! இதோ! துரோகி! கொலைகாரன்! வஞ்சகன்! நம்பிக்கைத் துரோகம் செய்த கொடும்பாவி! இதோ வருகிறேன்! கமலம்! என்னையும் அழைத்துக்கொள்! மாட்டாயா? கமலம்! அன்று நீ எனக்கு எவ்வளவு உபதேசித்தாய்! அதையெல்லாம் மறந்து, உனக்குச் செய்த துரோகத்தை மறப்பாயோ! கண்ணே! என்னை மன்னிப்பாயோ? உன்னை இழந்து தான் இனி உயிர் வாழவேனோ! உனக்குச் செய்யும் பிராயச் சித்தம் இதுதான்! என்னையும் அணைத்துக்கொள்!" என்று ஓடினேன் பிணத்தருகே! எல்லோரும் சேர்ந்து தடுத்து விட்டார்கள்! எல்லோர் கண்களிலேயும் கண்ணீர் கசிந்து கொண்டிருந்தது.

'இதோ! சேகர்! அவள் எழுதிய கடைசிக் கடிதம்! என்று ஒருவர் நீட்டினார்.

படித்தேன். கண்களை நீர் மறைத்தது! ஒருவர் படித்துக் காண்பித்தார்.

நம் குழந்தையையாவது
காப்பாற்றுங்கள்.
அவன் பழிச் சொல்லை
அகற்றுங்கள்,

மறக்கப்பட்ட, வெறுக்கப்பட்ட
"கமலம்".

கால்கள் தடுமாறச் சென்றேன் குழந்தையிருந்த இடத்திற்கு! பைத்தியக்காரன் போனிருந்தது என் நிலை. கிழிந்த ஆடை — புழுதிபடிந்த உடல் — விரிந்த தலை! கண்கள் கோவைப் பழம் போன்று சிவந்திருந்தது! மண்டையிலும் காலிலும் இரத்தம் கசிந்து, உறைந்து போயிருந்தது தள்ளாடினேன்! விழுந்து விழுந்து சென்றேன்!

பசியினாலும் குளிராலும் குழந்தை வீறிட்டு அழுதது கொண்டிருந்தது. அதை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு அழுதேன் சிறு குழந்தையைப் போல! அதுவும் அழுதது!

அதனுடன் தான் சென்று கொண்டிருக்கிறேன். சாலையும் சென்று கொண்டிருக்கிறது! நானும் சென்று கொண்டிருக்கிறேன்!

போர்டைப் பார்க்கிறேன் ஸார்!

29 MAY 1955
MADRAS

R. பெரியண்ண பிள்ளை,
தோத்தியப்பட்டி, ராசிபுரம்ரேஞ்ச், சேலம் ஜில்லா.

ஓர் சம்பாஷணை.

இடம் :—எயிடெட் பாடசாலை.

காலம் :—காலை.

பாத்திரங்கள் :—எயிடெட் பாடசாலையின் மேனேஜர்—ஹையர் போதனா முறைப் பரீக்ஷை எழுதியுள்ள ஆசிரியர்—8-வது வரை படித்துள்ள அன்டிரெயின்ட் ஆசிரியர்.

(மேனேஜர் பாடசாலையில் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார். இரண்டு ஆசிரியர்களும் அவரைக் கண்டு மரியாதை செய்கின்றனர்.)

மேனேஜர் :—வாருங்கள். இப்படி அமருங்கள். நீங்கள் யார்? தெரியவில்லையே!

போதனாமுறை ஆ. :—ஸார். நான் இவ்வருடம் ஹையர் பரீக்ஷை எழுதியிருக்கிறேன். உங்கள் பாடசாலைக்குப் போதனா முறை பயின்ற ஆசிரியர்கள் தேவையென்பதைப் பத்திரிகையில் கண்டேன். அந்த இடம் இருக்கிறதா அல்லது பூர்த்தியாகி விட்டதா என்பதை அறியவே வந்திருக்கிறேன்.

மே :—இடம் இருக்கிறது. நீர் இதிலேயே சேர்ந்து வேலை பார்க்கலாம். பரீக்ஷை சுமாராக எழுதியிருக்கிறீரா?

போ.-ஆ. :—எல்லாம் திருப்தியாகத்தான் எழுதியிருக்கிறேன். ஆனால் ஒரு பாடத்திலே மட்டும் கொஞ்சம் சந்தேகமாக இருக்கிறது. அதனால்தான் இந்த ரிசல்ட் தெரியும்வரை இதிலாவது கொஞ்சம் நாளைக்கு வேலை செய்யலாம் என அபிப்பிராயம்.

மே :—ரிசல்ட் தெரிந்தவுடன் என்ன செய்யப் போகிறீர்?

போ.-ஆ. :—ஏதாவது போர்டைப் பார்க்கலாமென்று......

மே :—எந்த போர்டைப் பார்க்கப் போகிறீர்?

போ.-ஆ. :—ஜில்லா போர்டு ஸ்கூலில் ஏதாவது ஒரு இடம் ....

மே :—இப்போது நீர் பார்க்கும் இந்த இடம்.

போ.-ஆ. :— போர்டின் சௌகர்யம் இதில் என்னங்க ஸார் இருக்கிறது?

மே :—இதென்ன இப்படிப் பேசுகிறீர். போர்டின் சௌகர்யம் இதில் என்ன இல்லாமல் போனது?

போ.-ஆ. :—போர்டைப் போல இதில் சம்பளம் மாதா மாதம் ஒழுங்காக எங்கே ஸார் கிடைக்கிறது?

மே :—ஏன் கிடைக்காது? ஹையர் கிரேடு ஆசிரியரானால் மாதம் 1-க்கு 27+3 ஆக 30 ரூபா முத்துப்போல் கிடைக்கிறது. பத்தாக் குறைக்குப் பஞ்சத்தைப் போக்கும் பஞ்சப் படியும் உண்டே.

போ.-ஆ. :—போர்டைப் போல பிராவிடன்பண்டு இதில் உண்டோ?

மே :—இல்லையென்னுங் காலம் இனி ஏது? மேனேஜராவது தம் பள்ளி ஆசிரியர்கள் அவ்வளவு பேருக்கும் P. F. கட்டித் தானே ஆக வேண்டும்.

போ.-ஆ. :—மாதாமாதம் சம்பளம் வந்தால் மணியார்டர் கமிஷனுக்காகச் சம்பளத்தில் பிடித்தம் செய்வது போர்டில் கிடையாது. ஆனால் எயிடெட் பள்ளியில் அந்தந்த ஆசிரியர்களின் சம்பளத்திலேயே பிடித்து விடுகிறார்களாமே?

மே :—ஆம். சர்க்காரிலிருந்து அப்பணம் கிடைப்பதில்லை. அதை மேனேஜ்மெண்ட் பிடித்தம் செய்துதானே ஆக வேண்டும். "ஆலை இல்லாத ஊரில் இலுப்பைப் பூ சர்க்கரை" என்பதே போல் அதைக்கூட நான் பிடித்தம் செய்யாமலேதான் கொடுத்து வருகிறேன்.

போ.-ஆ. :—இன்னொரு விஷயம்! சம்பள உயர்வு (இன்கிரிமெண்ட்) அதற்கும் இதற்கும் பல்லுப் போக உதைக்குமே ஸார். நீங்கள் போர்டைப்போல் இன்கிரிமெண்ட் கொடுக்கிறீர்களா?

மே :—தன் பிழைப்புக்கே தடுமாற்றம். நம்பி தானம் செய்வது எவ்விதம்? சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும். மேனேஜர் பணம் படைத்தவரானால் ஒரு சமயம் வீம்புக்கு வேட்டையாடுவாரோ என்னவோ?

போ.-ஆ. :—ஒரே அந்தஸ்துள்ள ஆசிரியர்களுக்கே ஜில்லா போர்டுக்கும் எயிடெட் பள்ளிக்கும் சம்பள உயர்வு—இவ்வளவு பாதகமாய் இருந்தால் எயிடெட் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் எவ்விதம் கிடைப்பார்கள்?

மே :—சம்பளம் உயர்வு தாழ்வு ஒருபுறமிருக்கட்டும், அடிக்கடி இடம்விட்டு இடம் மாற வேண்டிய சங்கடம் இதில் இல்லை பாருங்கோ! அதுவே ஒரு பெருமையல்லவா!

போ.-ஆ. :—மேனேஜ்மெண்ட் பாடசாலையில் ஒரே இடத்தில் நிலையாய் இருக்கலாமென்பது உங்களுக்கு எண்ணம் போலும்! அதில் பாருங்கோ! மிகவும் தொந்தரவு இருக்கிறது. பாடசாலை இருக்கிற ஊரிலே உள்ள அத்தனை பேருக்கும் உபாத்தியாயர் அடங்கியொடுங்கி தாசானுதாசனாய் நடந்து கொள்ளவேண்டும். போர்டிலே அந்தத் தொந்தரவு இல்லை பாருங்கோ! அந்தப் பள்ளியில் வேலை பார்க்கும் வரை பார்க்கலாம், மனம் பிடிக்கலே, ஒரு

கால் பீட்டுத்தான் செலவு. இருந்தா இந்த மடம், இல்லா விடில் சந்தை மடம் என்றபடி டோரா தூக்கிவிடலாம்.

மே :—இனி நாம் குடியாட்சி நாட்டிலே ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி. அதற்கும் இளைத்தவன் பள்ளிக் கூட உபாத்தியாயர் என்ற முது மொழிக்கிணங்க லக்ஷப் பிரபு முதல் பிச்சைக்காரன் வரையில் ஆசிரியர் கைகட்டி வாய்பொத்தி பேஷ் நல்ல வாத்தியார் எனப் பேர் எடுத்தால் மட்டும் இந்தச் சுண்டக்காய் வருவாயும் சர்க்காரிடமிருந்து சுமாராகக் கிடைக்கும்.

போ.-ஆ. :—எண்ணில்லா மக்களுக்கும், இன்றைய ஆட்சியாளர்களுக்கும் "அ" என்ற அக்ஷரத்தை அளித்த ஆரம்ப ஆசிரியர்கள் நாங்கள். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற பட்டம் பெற்றவர்கள் யார்? நாங்கள்தான் என்று ஏன் நாம் வீர கர்ஜனை செய்யக் கூடாது?

மே :—ஆரம்ப ஆசிரியர்களின் அண்ணலே! பகலெல்லாம் பால் மணம் மாறாப் பாலர்களுடன், தொண்டை தீய நாவறட்சியுற கத்திக்கத்தி இளைத்த யாக்கையை ஈடுசெய்ய வழியில்லாது கதறி வாடும் இந்த ஆரம்ப ஆசிரியர்களின் குறையைக் கேளுங்கள். மகான் காந்தியடிகளின் எண்ணத்திற்கு மாறாக நம் சுதந்திர நாட்டிலே! பருத்துத் திரண்ட பாங்கிக் காய்கள்தானே இன்னும் பட்டமும் பதவியும் பெறுகின்றன. தண்ணீரின்றி வாடி வதங்கிக் கிடக்கும் எங்களையும் பாருங்கள், எங்கள் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காவது ஒருவழி சொல்லுங்கள் என்று கதறி வடிக்கும் கண்ணீர் பெருக்கைக் கண்ணெடுத்தும் பார்ப்பாரில்லையே.

வீண் வீரத்தை அதுவும் இப்படிப்பட்ட திரவிய சகாய பள்ளியில் பேசிவிட்டாலே, அப்பப்பா, இந்த சுண்டக்காய் சம்பளமும் எத்தனை துண்டாகுமோ?

போ.-ஆ. :—"கறப்பது உழக்குப் பால் உதைப்பது பல்லுப் போக" என்பதைப்போல் இருக்கிறது இக்கதை. 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்றபடி யோசித்துப் பார்த்தால் எயிடெட்டைவிட போர்டிலே நல்ல சம்பள உயர்வு, இடம் விட்டு இடம் மாறினாலும் நல்ல T. A. இருக்கிறது. புதுப்புது ஊர்களைப் பார்க்கும் பாக்கியமும் உண்டு. போன இடத்தில் புது வாத்தியார் என்றாலே கொஞ்ச நாளைக்கு அன்பும் ஆதரவும் கிடைக்கும். "நான் போர்டையே பார்க்கிறேன் ஸார்."

மே :—உங்கள் அபிப்பிராயப் படியே செய்யுங்கள்.

(அருகில் இருக்கும் அன்டிரெயின்ட் ஆசிரியரைப் பார்த்து.)

நீர் யார்?

அ. ஆ. :—ஸார். நான் எட்டாம் வகுப்புவரை படித்து சர்டிபிகேட் வைத்திருக்கிறேன். இந்த பாடசாலையில் ஒரு உபாத்தியாயர் வேலை கிடைக்குமென்று வந்தேன்.

மே :—போதனு முறைப் பள்ளிக்கு விண்ணப்பம் செய்யவில்லையா ?

அ. ஆ. :—ஸார். நான் மிகவும் ஏழை. இவ்வருடப் போதனு முறைப் பள்ளிக்குச் செல்வதென்றாலும் கையில் காசு இல்லை. இவ்வாண்டு இதில் வேலை பார்த்தபின் கிடைக்கும் பணத்தைக் கொண்டு அடுத்தாண்டாவது பயிற்சிக்குச் செல்லலாமென்று இருக்கிறேன்.

மே :—அப்படியானுல் உமது சர்டிபிகேட்டைக் கொண்டு வந்திருக்கிறீரா ?

அ. ஆ. :—இதோ பாருங்கள் (தனது சர்டிபிகேட்டை மேனேஜரிடம் கொடுத்துவிட்டு அவர் சர்டிபிகேட்டைப் பார்க்கும்போது) எனக்கு மாதா மாதம் சம்பளம் என்ன கொடுப்பீர்கள் ?

மே :—நீர் E.S.L.C. தானே?

அ. ஆ. :—ஆம்.

மே :—அப்படியானுல் 15+18=33 ரூபாய் வீதம் கிடைக்கும்.

அ. ஆ. :—அதை ஒவ்வொரு மாதமும் 1, 2 தேதிக்குள் தவருது சம்பளமாகக் கொடுத்து விட முடியுமா ?

மே :—ஒரு எயிடெட் பாடசாலையில் அன்ட்ரெயிண்ட் ஆசிரியர் வேலை பார்த்தால் அவருக்குச் சம்பளம் உண்டா ? இல்லையா ? என்பதை அறிந்து கொள்ளவே ஆறு மாதத்திற்கு மேலாகுமே அப்பா ! ஏதோ நீர் மிகுந்த ஏழை என்ற வகையில் சம்பளத்தையாவது மாதம் ஒன்றுக்கு 15 ரூபாய் வீதம் கொடுத்து வருகிறேன். பஞ்சப் படியைச் சர்க்கார் கொடுக்கும் போது பெற்றுக் கொள்ளலாம்.

அ. ஆ. :—என்னங்க ஸார் ! போர்டிலே ஹையர் அண்டிரெயிண்ட் ஆசிரியர்க்கு மாதா மாதம் 20+18=38 ரூபாய் வீதம் கிடைக்கிறதாமே ! நீங்கள் அந்த ஐந்து ரூபாயை யாவது எடுத்துக்கொண்டு மாதா மாதம் 33 ஐ யாவது சம்பளமாகக் கொடுத்துவரக் கூடாதா ?

மே :—பேஷ் ! நன்ருக இருக்கிறது உமது வார்த்தை. ஒரு அண்ரெயிண்ட் ஆசிரியரை பள்ளியில் நியமனம் செய்து விட்டால் அவரது கிராண்டை சர்க்காரிடமிருந்து அடைவதற்குள் மேனேஜர் படும் அல்லல் கொஞ்சமல்ல ! அந்த 33 ரூபாயைக் கொடுக்கவே சர்க்கார் தயங்கும்போது இங்கு 38 ரூபாய் எவ்விதம் கிடைக்கும் ?

அ. ஆ. :—என்னங்க ஸார் சர்க்கார் கொடுக்கிற பணத்தை அந்தக் கையிலே வாங்கிக் இந்த

குழந்தைகளின் பத்திரிகை

(S. தியாகராஜன், ஆசிரியர், பாளையப்பட்டி)

சிறுவர்கள் பத்திரிகைகள் புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போல ஏராளமாகத் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. காலணு முதல் எட்டணு வரை விலையுள்ள குழந்தைகள் பத்திரிகை விற்பனையாகின்றன. சில சிறுவர் பத்திரிகைகளில் பெரியவர்கள் மறந்துபோன விஷயம் அல்லது தெரிந்து கொள்ளாத விஷயங்கள்கூட இருக்கின்றன. பாராட்டப்படக்கூடிய விஷயந்தான்.

ஆனல் ஒரு பெருங்குறை. சிறுவர்கள் பத்திரிகைகள் எல்லாம் பள்ளியில் படிக்கக்கூடியவர்கள் தான் வாங்குகிருர்கள். அப்பத்திரிகைகளில் பள்ளிக்கூட ஆசிரியர்களை மாணவர் கிண்டல் செய்வது போலெல்லாம் எல்லாப்பத்திரிகைகளிலும் கேலிப் படங்களும் விகடத் துணுக்குகளும் காணப்படுகின்றன. இளஞ் சிறுர்கள் மனது பக்குவமடையாதது. வினையையும் வேடிக்கையையும் பகுத்தும் பூரணமாகஅறிந்து கொள்ள முதிர்ந்த அறிவு பெருதவர்கள். அவர்கள் மனது வளையுந்தன்மையது. இம்மாதிரி சூழ்நிலைகளைக் கொடுத்தால் அனுபவத்திலும் காண்பித்து விடுவார்கள். ஆசிரியர்களிடம் அவர்களுக்கு இருக்கவேண்டிய அடக்கம் குறையும். அவர்கள் ஒழுக்கக் குறைபாட்டுக்கும் காரணமாகும். ஆதலால் இது விஷயத்தில் கவனம் செலுத்துமாறு குழந்தைகள் பத்திரிகை ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(44-ம் பக்கத் தொடர்ச்சி)

கையிலே கொடுக்கிறதற்கு இவ்வளவு யோசனை செய்கிறீர்கள்?

மே :—யோசிக்காமல் என்ன செய்வது? குறைந்தது ஆறு மாதச் சாப்பாட்டிற்காவது ஆயத்தம் செய்து கொள்ளாத ஒரு அண்ரெயிண்ட் ஆசிரியர் திரவிய சகாய பள்ளியில் வேலை செய்ய முடியாமல் இருக்கிறதே என்பதைக் குறித்து மிகவும் வருந்துகிறேன். இதை உடனடியாக நம் சர்க்கார் கவனிக்கும் எனவும் நினைக்கிறேன்.

அ. ஆ. :—"மேலைக்கே கல்யாணம் கழுத்தே சுகமாயிரு" என்பதைப் போல் வரங் கொடுக்கிறீர்கள். வெட்டுகிற கிணத்துக்கும் வேய்கிற வீட்டிற்கும் எம் மாத்திரம். நானும் போர்டையே பார்க்கிறேன் ஸார்.

மே :—மிகவும் நல்லது சென்று வாருங்கள்.

கவனிப்பார்களா?

R. பெரியண்ண பிள்ளை

தோரத்தியபட்டி, ராசிபுரம்ரேஞ்ச், சேலம் ஜில்லா.

உயர்தர ஆரம்பப் பள்ளியின் முடிவுத் தேர்வான அரசாங்கத் தேர்வில் ஏற்படும் மாணவர்களின் மனக் கலக்கத்தையும், ஆசிரியர்களின் அவமதிப்பையும் போக்கவேண்டும். அப்படிப் போக்க முதலில் அரசாங்கத் தேர்வை நிறுத்த வேண்டும்.

இப்பொழுது ஐந்து வகுப்புகளுக்கு ஆரம்பப் பள்ளிகளில் லோயர் & ஹையர் கிரேடு ஆசிரியர்கள் வேலை செய்யலாம். தற்போதுள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிகளை எடுத்துவிட்டு அதிலுள்ள I to V வகுப்புகளை ஆரம்பப்பள்ளி என்ற முறையில் வைத்து மீதியுள்ள VI to VIII வகுப்புகளை (Forms) ஆக மாற்றி நடுத்தரப் பள்ளிகளாக (Middle Schools) மாற்றி அதில் செகண்டரி ஆசிரியர்கள் மட்டும் வேலை செய்தல். அதே சமயத்தில் VIII Sd அரசாங்கத் தேர்வை நீக்கவேண்டும். அம்மாதிரி ஏற்படும் நடுத்தரப் பள்ளிகளுக்கு L. T. ஆசிரியர்கள்தான் தலைமை தாங்கவேண்டும் என்ற அவசியமில்லை. ஒரு ஆரம்பப் பள்ளிக்குரிய வேலையை எப்படி ஒரு ஹையர் கிரேடு ஆசிரியரால் செய்துகொள்ள முடியுமோ, அதேபோல் செகண்டரி ஆசிரியர்கள் நடுத்தரப் பள்ளியை நிர்வாகம் செய்ய முடியும். மேலும் நடுத்தரப் பள்ளிகளில் (I form) முதல் படிவத்திலேயே ஆங்கிலம் முதல் எல்லாப் பாடங்களும் போதிக்க வேண்டும்.

உயர்தர ஆரம்பப் பள்ளிகளை மாற்றுவதுபோல் ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிகளிலுமுள்ள I to III Forms இவைகளைப் பிரித்து நடுத்தரப் பிரிவின் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும். மற்றுமுள்ள IV to VI Forms இவைகளை உயர்நிலைப்பள்ளி என்ற பேரால் வைத்து இதற்கு மட்டும் L. T. பயின்ற ஆசிரியர்கள் வேலை செய்தால் போதுமானது. ஆகவே I to V Sd என்றால் இது ஆரம்பப் பள்ளியாகவும், I to III Forms என்றிருந்தால் இவை நடுத்தரப் பள்ளியாகவும், IV to VI Forms என்றிருந்தால் இவை உயர்நிலைப்பள்ளியெனவும் இருந்தால் நல்லது.

இவ்வாறு ஏற்படுத்துகிற காலத்தில் ஆரம்பப் பள்ளியில் ஒரு மாணவன் தேர்ச்சிபெற்று தலைமையாசிரியரிடம் தேர்வுப் பத்திரம் வாங்கி வருவானாயின் அம்மாணவனை எவ்வித தடையுமின்றி நடுத்தரப் பள்ளியில் முதல் படிவத்தில் சேர்த்துக்

கொள்ளவேண்டும். இதேபோல் நடுத்தரப் பள்ளியில் தேர்ச்சி பெற்றுத் தலைமையாசிரியரிடம் தேர்வுப் பத்திரம் வாங்கிவரும் மாணவனை எவ்விதத் தடையு மின்றி உயர்நிலைப் பள்ளியில் நான்காம் படிவத்தில் (IV form) சேர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு ஏற்படுத்துவதால் ஆசிரியர்களையும், பள்ளிகளையும் இன வாரியாகப் பிரித்ததுபோலாகும். அதனால் எவ்வித தீமையும் இன்னலும் ஏற்படாது. அவரவர்கள் சக்திக்கும், பண்புக்கும் தகுந்தவாறு பிரிப்பது தவறல்ல. பிரிப்பதால் இன்றுபோல் செகண்டரி ஆசிரியரே இல்லாத உயர்தர ஆரம்பப்பள்ளி நடப்பதுபோல் நடத்த முடியாது. ஆசிரியர்கள் இல்லையென்று அரசாங்கத்தினரும், ஜில்லாபோர்டுகளும் நினைக்கவும் இடமிருக்காது. நிறைய போதனுமுறைப் பள்ளிகள் திறந்தாக வேண்டும். அதில் போதிய ஆசிரியர்கள் பயிற்சிபெற்று கல்விக்காக உழைத்தாக வேண்டும் என்ற நிலை ஏற்படும்.

உயர்நிலைப் பள்ளிகளில் இப்பொழுது இருப்பதுபோல் முற்போக்கு ஜாதியினர், சோற்றுக்கு வழியில்லாது பிச்சையெடுப்பினும் அரைச் சம்பள சலுகை மட்டிலும் கிடையாது என்ற முறையை மாற்றி ஏழை, பணக்காரன் என்ற பொருளாதார நிலைக்குத் தக்கவாறு சம்பள சலுகை ஏற்படுத்தவேண்டும். பிற்போக்கு ஜாதியென்றால் அவனது ஜாதிதான் பிற்போக்கா? அல்லது அவனுடைய பொருளாதாரம் முதல் எல்லாமே பிற்போக்கில் இருப்பான் என எண்ணிக்கொண்டு, அவர்களில் செல்வத்தில் புரள்பவனுக்குக்கூட ஜாதி என்ற பெயரால் சலுகை அளிப்பது முற்போக்கு என்ற ஜாதி பெயரால் பிற்போக்கில் இருப்பவர்கள் மீண்டும் பிற்போக்கிலேயே செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஆரம்பப்பள்ளி வரையாவது ஒவ்வொருவரும் படித்தாக வேண்டும் என்ற கட்டாயக் கல்வியை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகள் பள்ளிக்கு வாராத பொறுப்பை ஆரம்ப ஆசிரியர்கள் தலையில் கட்டாது இதற்கென ஒவ்வொரு ரேஞ்சுக்கும் டிப்டி இன்ஸ்பெக்டரைப் போன்று ஒரு கட்டாயக் கல்வியதிகாரி தேவை. பள்ளிக்கு ஒழுங்காக அனுப்பாத பெற்றோர்களை விசாரித்துக் கட்டாயப்படுத்திபிள்ளைகளைப்பள்ளிக்கு அனுப்பச் செய்வதே அவரது கடமையாகும். இவர் கிராமத்துக்கு வரும் சமயம் கிராமமுன்சீப் இவருக்கு உதவிபுரியச் செய்வது மிகவும் நல்லது. இத்திட்டத்தைக் கவனித்தால் கட்டாயக் கல்வி அமுலுக்கு வரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தற்போது எப்படி உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் கல்வி கட்டணம் இல்லையோ அதேபோல் நடுத்தரப் பள்ளிகளுக்கும் கல்விக்காகக் கட்டணம் வசூலிக்கக்

கூடாது. இவ்வித மாறுதலேற்பட்டால் எவ்வளவோ ஏழை மாணவ மாணவிகள் நடுத்தரப் பள்ளி வரையாவது நிச்சயம் படிக்கலாம், என்ற தைரிய மேற்பட்டு படிக்க முன்வருவார்கள் நாட்டின் கல்வி பெருகும். அறியாமை மறையும், கட்டாயக் கல்வியும் வெற்றிபெறும். இவ்வித சலுகை செய்வதானால் பணம் இல்லையே என நம் சர்க்கார் கேட்கலாம். ஏன் இப்பொழுது தமாஷ் வரிபோன்ற முறையில் எவ்வளவோ வரிகளை மக்களிடம் வசூலிக்கிறார்கள். அதைத் திருப்தியோடு மக்கள் அளிக்கிறார்கள். அதேபோல விவாக வரி ஏன் விதிக்கக் கூடாது. இன்று நாட்டில் ஆயிரக்கணக்கான ரூபாயை விவாகத்தின் பெயரால் செலவு செய்கிறார்கள். சுமக்க முடியாத அளவில் (பவுன்) நகைகளை அணிவிக்கிறார்கள். பத்தோடு பதினொன்று அத்தோடு அதொன்று என்ற வகையில் அவரவர் அந்தஸ்துக்குத் தக்கவாறு அரசாங்கத்துக்கும் சிறிது பணம் கொடுக்கட்டுமே. விவாகச் செலவில் இதையும் சேர்த்துக் கொள்ளட்டுமே. தற்போது பட்டணங்களில் இருப்பது போன்ற பதிவுத் திருமணம் கிராமங்களிலும் நடத்தட்டுமே. ஒரு ஆணும், பெண்ணும் இல்லற வாழ்க்கைக்கு ஒன்றுபட கணக்கில்லாத பணம் செலவு செய்யும் போது ஏன் அதற்கென ஏற்படுத்தப்பட்ட வரியைக் கட்டக் கூடாது. ஏன் கட்ட மாட்டார்கள். கட்டியே தீருவார்கள். கட்டவேண்டும் என்ற நிபந்தனையும் தேவை. கணக்கில்லா காஸ் லைட்டுகள் போட்டு, படாடோபமான பக்கமேளமும், பயனற்ற பாதநாட்டியத்துடனும் திருமணம் செய்ய முடியும்; வரி செலுத்த முடியாதா? ஆயிரக் கணக்கான செலவில் விருந்து வைக்க முடியும் வரி கட்ட முடியாதா? கண்டிப்பாக முடியும். கட்டியே தீருவார்கள். பதிவுத் திருமணம் கட்டாய அமுலுக்கு வரவேண்டும். பதிவு செய்து கொள்ளாமல் எந்த ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் உரிமை கூடாது. பதிவின்றி கள்ளத் திருமணம் செய்வோருக்குத் தக்க தண்டனை விதிக்கப்பட வேண்டும். இப்படி யேற்படுத்துவதால் நாட்டின் களவொழுக்கம் நாளுக்கு நாள் மறைந்தே தீரும். ஆணும் பெண்ணும் தன்னிச்சையாக ஒழுக்கங்கெட்டுத் திரிய முடியாது. இன்றுள்ள சாரதாச் சட்டமும் வெற்றிபெற ஏதுவாகும். அரசாங்கத்துக்கும் நல்ல பணம் கிடைக்கும். இவ்வித வரிகளின் உதவியால் நாட்டின் கல்வி நிலையை உயர்த்த முடியும். ஆனால் இதை நம் ஆட்சியாளர்கள் கவனிப்பார்களா?

பொன் மொழிகள் :—

சி. பார்சுவநாதம் ஜெயின், தலைமை ஆசிரியர் பஞ்சாயத்துபோர்டு பாடசாலை, கொண்டையன் குப்பம், நல்லூர் அஞ்சல், வந்தவாசி வட்டம்; வட ஆற்காடு மாவட்டம்.

நண்பனே :

1. இறைவனிடம் நீ நின்று அன்பு செய்யும்போது "ஏ ஆண்டவனே ! உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் இன்புற அருள் புரிவீர்" என்று வேண்டு. அப்படியின்றி "என்னைக் காப்பாற்று" என்றுமட்டும் வேண்டாதே. உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் காப்பாற்று என்று வேண்டுவாயானால் அவ்வுயிர்களில் நீயும் ஒருவன் தானே.

2. கடவுளை வணங்கும்போது "இதைக் கொடும்" "அதைக் கொடும்" என்று கேட்காதே. உனக்கு வேண்டியனயாவும் அவரே தருவார். உனக்குள்ள குறைகள் சொல்லாமலேயே அவருக்குத் தெரியும். கொடுப்பதில் உலோப குணமில்லாதவர். எல்லாம் அவருடைமை. அவர் எல்லாம் உணர்ந்தவர். கருணைக்கடல் யாவும் அருளவல்லார். ஆதலினால் இறைவனை அன்பினால் வணங்கு. அவரிடம் வியாபாரம் பண்ணாதே.

3. நீ உடம்பை வளர்க்க முயற்சி செய்வதோடு உயிரையும், வளர்க்க முயற்சி செய். ஏனெனில் உயிர் சிறந்தது. உயிரில்லாத உடம்பை யாரும் பேணுவதில்லை. உயிர் நீங்கியவுடனே உடம்பை மண்ணிலே புதைத்து விடுகின்றனர். அல்லது எரித்து விடுகின்றனர். ஆதலினால் இந்த உடம்புக்குள் உறையும் உயிருக்கு உறுதி தேடு.

4. நல்ல உணவுகளை உண்பதினால் உனது உடல் வளரும்.

நல்ல நூல்களைப் படிப்பதனால் உனது உணர்ச்சி வளரும். நல்ல உள்ளத்துடன் சதா இறைவனை நினைப்பதனால் உனது உயிர் வளரும். ஆதலினால் உடம்பையும், உணர்ச்சியையும், உயிரையும், வளர்த்துக்கொள்.

5. அறிவிலும், ஆற்றலிலும் சிறந்த ஆன்றோர்களைத் துணையாகக் கொண்டு ஒழுகு. அதனால் உனது வாழ்வு உயர்ச்சியுறும். துன்பத்தில் அழுந்தமாட்டாய்.

கொடியானது உயர்ந்த மரத்தைப் பற்றிச் சுற்றிக் கொள்ளுமானால் வானம் வரை உயர்கின்றது. இல்லையேல் மண்ணில் படர்ந்து காலினால் மிதிபடுகின்றது.

6. துன்பங்களுக்கெல்லாம் பெரிய துன்பமாவது அறிவில்லாதவர்களோடு பழகுவதேயாம். இன்பங்களுக்கெல்லாம் பெரிய இன்பமாவது அறிஞர்களோடு பழகுவதே. அறிஞர்களுடன் பழகும் போது உண்டாகும் இன்பம் அளவுகடந்தவை. மொழிக்கு மொழி தித்திக்கும் இனிய மொழிகளும், அறவுரைகளும் அறிஞரிடமுண்டாகின்றன. அவற்றால் உன் உள்ளம், உயிர், உணர்ச்சி ஆகிய அனைத்தும் குளிரும்.

7. நிரம்பவும் படிப்பதைவிட, படித்தபடி நின்று ஒழுகுவதற்கு முயற்சி செய். படிப்பது உணவு உண்பதுபோல: ஒழுகுவது உணவு சேமிப்பது போல. உணவு நிரம்ப உண்டாலும் செமிக்கவில்லையானால் என்ன பயன். செமிக்காத உணவு துன்பஞ் செய்கின்ற தன்றோ ஆதலினால் சிறிது படித்தாலும், கற்றவண்ணம் நிற்க வேண்டும்.

(ஓதலினன்று ஒழுக்கமுடைமை)

8. கற்பதும், கேட்பதும் இறைவனை யடைவதற்கே. கல்வியின் பயன் அதுவே. பட்டம் பெறுவதற்கென்றும், சிறந்த அறிவாளி என்று பிறர் மெச்சுவதற்கென்றும், கூட்டத்தினின்று மொழிக்கு மொழி தித்திக்க இனிமையாகவும். சதுரப்பாடாகவும் பேசுவதற்கென்றும் படிக்காதே.

(கல்வியின் பயன் கடவுளைக் காணல்.)

9. நீ செய்த பாவங்களை நீயே பிறரிடம் கூறுவதனால் பாவம் குறையும். குறைய வேண்டியது பாவம். நிறைய வேண்டியது புண்ணியம். ஆதலினால் நீ செய்த புண்ணியத்தைக் கூறாதே. பாவத்தைக் கூறு.

10. உனது செல்வம் அழியாமலிருக்க வேண்டுமானால் மூன்று காரியங்களை நீ செய்யாமலிருக்க வேண்டும்.

(1) ஏழைகள் கண்களிலிருந்து நீர் வரவொட்டாமல் நடந்துகொள்.

(2) பிறருடைய பொருள் உனக்கு வரவேண்டுமென்று கனவிலும் கருதாதே.

(3) நியாயம் அல்லாத வழியில் பொருளைச் சேர்க்காதே.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

ஆரம்ப ஆசிரியர்களின் கேஷுவல் லீவு

A. P. குமார்

ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒரு வருடத்திற்குப் பதினைந்து நாட்கள் தான் கேஷுவல் லீவு உண்டு. இந்தப் பதினைந்து நாட்கள் போதாது. இருபது நாட்கள் இருந்தால் போதுமானது. 1950–51 வருடங்களில் இருபது நாட்கள் கேஷுவல் லீவு கொடுக்கப்பட்டது. ஜில்லாபோர்டாரால் இப்பொழுது பதினைந்து நாட்களாகக் குறைந்தது. இது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். இதை மீண்டும் இருபது நாட்களாக உயர்த்தினால் ஆசிரியர்கள் சிறிது சௌகரியம் பெறக்கூடும்.

ஜில்லா போர்டு ஆரம்ப பாடசாலைகளில் உதவி ஆசிரியர்கள், லீவு பெறும்போது தலைமை ஆசிரியர்களிடம் அநுமதி பெற்று போகிறார்கள். ஒரே பாடசாலையில் வேலை செய்வதால் சாதாரணமாக அவசர காரியங்களுக்கு உடனேயும், அவசரமில்லாத முக்கிய காரியம் என்ற காரணத்தினால் முந்தின நாளில் அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னதாக லீவு அநுமதி பெறமுடிகிறது. ஆனால் தலைமை ஆசிரியர் லீவு பெறவேண்டுமானால் பதினைந்து தினங்களுக்கு முன், லீவு மனுவை ஜில்லா போர்டு ஆபீஸுக்கு அனுப்பி அநுமதி பெற்று லீவை உபயோகிக்க வேண்டுமென்று ஆபீஸ் சுற்றறிக்கை கூறுகிறது. நன்மையான காரியங்களோ அல்லது தீமையான காரியங்களோ வருவதை முன்னமே அறிந்து லீவு கேட்க முடியுமா? உதாரணமாக அடுத்த மாதம் அல்லது இன்னும் பதினைந்து அல்லது இருபது நாட்களுக்குப் பின் தலைவலி, காய்ச்சல் வரும் என்று ஜோசியம் பார்த்து லீவு கேட்கமுடியுமா? திடீரென்று ஒரு நாளைக்கு காய்ச்சல், தலைவலி வந்தால் லீவுக்கு எங்கே போவது? ஆகவே இம்முறை மாறி அவசரமான முக்கிய காரியங்கள் இருந்தால், லீவு மனுவை ஆபீஸுக்கு அனுப்பி விட்டு லீவை உபயோகப்படுத்திக்கொள்ளவும், மற்றவைகளுக்கு முன் அநுமதி பெற்று லீவை உபயோகிக்க சந்தர்ப்பமளிக்க வேண்டுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இரண்டாவதாக, ஜில்லா போர்டு பாடசாலைகளுக்கு அச்சிட்ட லீவ் மனு பாரங்கள் ஆபீஸிலிருந்து சப்ளை செய்யப்படவேண்டும். சில வருஷங்களாக அச்சுப் பாரங்கள் அனுப்பப்பட்டு வந்தது. இப்பொழுது அனுப்பப்படவில்லை. இவைகளையும் ஜில்லா போர்டு கவனித்து அந்தந்தப் பாடசாலைக்கு வேண்டிய பாரங்களை அனுப்பவேண்டுகின்றோம். லீவு மனுக்களை முன் அநுமதிபெற அனுப்பினால், எந்த நாள் லீவு வேண்டுமோ அந்தக் குறிப்பிட்ட நாள் கழிந்த பின்னர், லீவு மனு சாங்கிஷன்

(48–ம் பக்கம் பார்க்க)

மா. ச. ரெங்கசாமி அய்யர் தலைமை ஆசிரியர் நாடார்சரஸ்வதிப்பள்ளி
மதுரை ரோடு தேனி

வாக்கும் பரிசும்

" நாட்டினிலே கல்வியில்லை நல்லதொரு
நூலியற்றும் திறமைபெற்றோர் மிகக்குறைவு.
தீட்டுகின்ற சிறுமுடங்கல் செய்தித்தாளை
திருத்தமுடன் படித்தறிவோர் ஓரிரண்டு.
ஏட்டினிலே காணாத விதத்தனிலே
இழிநிலையை நம்மக்கள் பெற்றுவிட்டார்.
மீட்டுதற்கும் முடியாத முறையினிலே
மிதிபடுகிறார் அறியாமைக் குட்டையிலே "

" கல்வியென்ற ஒருசொல்லுக் குரிமைபெற்றோர்
காலத்தாற் செல்வரென ஆகிவிட்டார்
செல்வியென்று கல்விக்கே பெயர்படைத்த
திருமகளும் அவரிடமே தஞ்சமானாள்.
பலவிதமாய் கலைவளர்த்த இந்தநாடிப்
பரிதாப நிலைமையதைப் பெற்றதேனோ?
நல்விதமாய் எல்லோரும் கல்விகற்கும்
நற்பணியில் உம்கருத்தைச் செலுத்த வாரீர் "

" காரிருளைப்போக்கவேண்டும் கலைவளர்க்கும்
பேரறிஞர் நாட்டினிடைப் பெருகவேண்டும்
மாரியது பொழிவதுபோல் மன்றத்தில்
வண்டமிழின் முழக்கமது ஒலிக்கவேண்டும்
யாரிடத்தும் மடமையது நீங்கவேண்டும்
அறிவென்னும் சுடர்விளக்கு மிளிரவேண்டும்
பாரிலுள்ளோர்க் கிணையாக நம்நாடும்
பல்துறையும் முன்னேற்றம் காணவேண்டும் "

" அத்தனைக்கும் வித்தாக விளங்குகின்ற
ஆசிரியர் வாழ்வுவள மாகவேண்டும்
பத்தாத சம்பளத்தில் சலாடும்
பழைமையான வாழ்க்கையதை மாற்றிவிட்டுப்

புத்தம்புது முறையினிலே வாழ்வதற்குப்
போதுமான ஊதியத்தை நிச்சயித்து
இத்தரையில் வாழவழி செய்யவேண்டும் "
இந்தவித மாகஅன்று மேடையேறி

மடைதிறந்த வெள்ளம்போல் வார்த்தைகளை
மக்கள்முன் கொட்டிவிட்டு மோனத்தைக்
குடைப்பிடிக்கும் தந்திரிமார் இன்றெமக்குக்
கொடுக்கின்ற தொருபரிசு இருண்டவாழ்வு!
உடையில்லை! உண்பதற்கு உணவில்லை!
உரிமையில்லை பேசுதற்கு ஆனாலும்
நடைப்பிணமாய் அலைவதற்கு உயிர்மட்டும்
நலிந்தஉடல் தனைப்பற்றி நிற்கிறதே.

ஆசிரியரின் சம்பளம்

ஆசிரியர்கள் சம்பள விகித உயர்வு, அவர்கள் குழந்தைகள் கல்விக்கான சலுகைகள் இவை பற்றி புதிய அசெம்பிளியில் விவாதிக்கப்பட்டது பற்றி மகிழ்ச்சி. ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக அல்லல்பட்டு உழன்று வருபவர்கள். அவர்கள் பல சங்கங்கள் மூலம் கேட்கும் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் விவாதத்தோடும், எழுத்தோடும் நிறுத்திவிடாமல் உடனடியாக நிறைவேற்றி வைக்கவேண்டியது மிக அவசியமாகும்.

(46-ம் பக்கத் தொடர்ச்சி)
செய்யப்பட்டு திரும்ப அனுப்பப்படுகிறபடியால், வேண்டிய லீவு நாட்களை உபயோகிக்க முடியாமல் போகிறது. ஆகையால் இந்த மாதிரியான காரியங்கள் காலாகாலத்தில் முடியுமாறு வேண்டுவன செய்யவேண்டுகின்றோம்.

**Edited, Printed and Published, by P. Veeraraghavan,
at Venkatesan Press, 94/95 New St. Mannady,
Madras—1.**